பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 25 திங்கட்கிழமை (09.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 222

# இரு தரப்புகளும் விரும்பும் வரைக்கும் நோர்வேயின் அனுசரணை தொடரும்

## தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சொல்கிறார்



கொழும்பு,ஜூலை9

**இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் விரும்பும் வரைக்கும் இலங்கை அமைதி முயற்சிகளில் நோர்வே அனுசரணைப் பணியில் தொடர்ந்து ஈடுபடும்.**

**- இவ்வாறு தெரிவித்துள்ளார் நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர். கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அனைத்துலகத்தின் அமைதி மற்றும் அபிவிருத்திப் பணிகளில் நோர்வே பல ஆண்டு காலமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அந்தப் பணியானது எமது நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையில் ஒருங்கிணைந்த ஒன்றாகும்.

முன்னாள் சிறிலங்கா அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க மற்றும் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்ததற்கமைய நாம் இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணைப் பணியில் ஈடுபட்டோம். மஹிந்த ராஜபக்ஷவினாலும் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இத்தகைய வேண்டுகோள்களுக்கமைய இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான எம்மாலான அனைத்து உதவிகளையும் செய்துவருகின்றோம்.

**பொருளாதார நோக்கத்துடன் அனுசரணைப் பணி செய்யவில்லை**

எமது அனுசரணையாளர் பணியை எதிர்த்து கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தின் முன்பாக எமது நாட்டின் கொடிகளும் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டன. எமது பணிப்பாக நாம் கொடுத்திருக்கும் ஒரு சிறிய விலை இது. ஐக்கிய இலங்கையில் அனைத்து இன மக்களும் அமைதியாக வாழவேண்டும் என்பதுதான்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம்,ஜூலை9

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறமாட்டாது என யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இன்று கப்பலில் செல்வதற்கு யாழ். செயலகத்தில் பயண அனுமதிப் பத்திரத்தைப் பெற்றவர்கள், பயண ஏற்பாடுகளுடன் நாளை காலை யாழ். ரயில் நிலையத்துக்குச் செல்லுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

அடுத்த கப்பல் பயணத்துக்கு யாழ். செயலகத்தில் பயண அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் குறிப்பிட்ட திகதிக்கு மறுநாள் பயணத்தை மேற்கொள்ளுமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

அதேவேளை -

பிற மாவட்டங்களுக்கு கடமையின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிகல பகுதியில் விமானக் குண்டுவீச்சு

கொழும்பு,ஜூலை9

தொப்பிகல பிரதேசத்தை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு உதவியாக விமானப் படையினர் தொடர்ச்சியாக விமானத் தாக்குதல்களை நடத்திவருகின்றனர் என்று ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை தொப்பிக்கல பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று அந்த நிலையம் தெரிவித்துள்ளது. (சி)

## கிழக்கில் புலிகள் மீது தாக்குதல்; 15 பேர் மரணம் என அறிவிப்பு

கொழும்பு,ஜூலை9

கிழக்கில் தொப்பிகலபகுதியில்வெள்ளிக்கிழமை மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளின் 15 உறுப்பினர்கள் உயிரிழந்ததாக படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

உழவு இயந்திரம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது படையினர் இத்தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## திருமலைக் கடற்பரப்பில் சனி நள்ளிரவு புலிகள் - கடற்படையினர் உக்கிர மோதல்!

திருகோணமலை,ஜூலை9

திருகோணமலைக் கடற்பரப்பில் - புல்மோட்டைக்குச் சமீபமாக - கடற் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் சனிக்கிழமை நள்ளிரவு உக்கிர மோதல் நடைபெற்றது.

அதிகாலை சுமார் 3 மணி நேரம் நீடித்த இந்தச் சமரில் கடற்படையினரின் மூன்று 'டோறா' படகுகள் சேதமாக்கப்பட்டதாக கடற்புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கடலில் கடும் சண்டை இடம்பெற்றதாகக் கூறிய கடற்படையினர், தமது தரப்பில் ஏற்பட்ட சேதம் குறித்துத் தகவல் வெளியிடவில்லை.

கிழக்குக் கடற்பரப்பில் கொக்குத்தொடுவாய் தொடக்கம் கொக்கிளாய், புல்மோட்டை வரையான பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் 21 டோறா பீரங்கிப் படகுகளைக் கொண்ட அணி மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது சிறிலங்கா கடற்படைக்கு ஆதரவாக கொக்குத்தொடுவாய் - கொக்கிளாய் - புல்மோட்டை பகுதிகளிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் செறிவான ஆட்லறி மற்றும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்த முறியடிப்புத் தாக்குதலில் கடற்புலிகள் இருவர் வீரச்சாவைத் தழுவியதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

புல்மோட்டை கலாராவ மீன்பிடிக் கிராமத்துக்கு அருகிலேயே கடலில் குறைந்தது 15 படகுகளைக் கொண்ட கடற்புலிகளின் அணி ஒன்று கடற்படையினரின் ரோந்து அணி மீது திடீர்த் தாக்குதலை மேற்கொண்டது என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

'கடற்சமரில் விடுதலைப் புலிகளுக்கு பலத்த இழப்புகள், சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்புகிறோம்' என்று கடற்படைப் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி. தஸநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் நடப்பதற்கு சற்று முன்னர் குச்சவெளியில் உள்ள கடற்படை முகாம் மீது புலிகள் தரைவழியாகத் தாக்கினர் என்றும் கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

கலாராவ பகுதியில் நிலைகொண்டுள்ள

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் உடனே தேர்தல் நடத்த இராணுவ அதிகாரிகள் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 9

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை உடனே நடத்துவது என்ற அரசின் யோசனைக்கு படை உயரதிகாரிகள் மட்டத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தேர்தலை நடத்துவது தொடர்பாக மஹிந்த அரசு தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டு வருகிறது. ஆனால் கிழக்கின் தற்போதைய சூழ்நிலையில் தேர்தலை உடனே நடத்துவது சாத்தியமற்றது என்று இராணுவத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும் கிழக்கில் தற்போது தேர்தல் நடத்தினால் தங்களால் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது என்றும் படை அதிகாரிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இதனிடையே ஆளும் சுதந்திரக் கட்சியின் ஆண்டு மாநாடு எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அம்மாநாட்டில் கிழக்குத் தேர்தல்கள் தொடர்பான நிலைப்பாட்டை மஹிந்த ராஜபக்ஷ வெளியிடுவார் என்று கூறப்படுகிறது. (சி)

## தொப்பிகலவில் 60 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தையே இன்னும் மீட்கவேண்டுமாம்

### ஆனால் மெதுமெதுவாகவே முன்னேற்றம்

கொழும்பு, ஜூலை 9

தொப்பிகலப் பிரதேசத்தில் இன்னமும் 60 சதுரக் கிலோமீற்றர் பிரதேசத்தையே தாம் மீட்கவேண்டி உள்ளதாக இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது.

தொப்பிகல பிரதேசம் 860 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணம் கொண்டது. இதில் 800 சதுரக் கிலோ மீற்றர் பகுதியைப் படையினர் மீட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் வசம் உள்ள 60 சதுர கிலோமீற்றர் விஸ்தீரணம் கொண்ட பகுதியை மீட்பதற்கு படையினர் தொடர்ந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நாரமுல்ல வடக்குப் பகுதியில் இருந்து படையினர் தொப்பிகல நோக்கியும் தொப்பிகல தெற்குப் பகுதியில் இருந்து நாரமுல்ல நோக்கியும் இரு முனைகளில் முன்னேறி வருகின்றனர். மிதிவெடிகளை அகற்றி நிலப்பரப்புகளை மீட்டுக்கொண்டே படையினர் நகர்வதால் அவர்களின் முன்னேற்றம் மெதுமெதுவாகவே நடைபெறுகிறது - என்று இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது. (அ-1)

## ரணிலிடமிருந்து ரூ. 2 பில்லியன் நட்டஈடு கோருகிறார் மஹிந்த

கொழும்பு,ஜூலை 9

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இரண்டு பில்லியன் ரூபா நட்டஈடு கோரியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கேகாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் ஜனாதிபதியை அவதூறு செய்யும் விதத்தில் ரணில் பேசியிருந்தார் என்று குறிப்பிட்டு மஹிந்தவின் சட்டத்தரணி நட்டஈடு கோரும் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சேபத்துக்குரிய அந்தப் பேச்சை 'லங்காதீப' பத்திரிகை பிரசுரித்திருந்ததாகவும் மஹிந்தவின் சட்டத்தரணி கூறினார். (அ)

## கிபிர் விமானத்தில் பொருத்திய பீரங்கி திடீரென வெடித்தது!

### கட்டுநாயக்க விமானத் தளத்தில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு,ஜூலை9

கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் 'கிபிர்' விமானத்தில் 30 மி.மீ. பீரங்கித் துப்பாக்கியை பொருத்திய வேளை அது வெடித்துச் சிதறியது.

அந்த விபத்துச் சம்பவத்தில் நான்கு விமானப் படையினர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானத்தில் பீரங்கித் துப்பாக்கி பொருத்திக் கொண்டிருந்த வேளையில் அது எதிர்பாராத விதமாக தானாக இயங்கியதால் வெடித்துச் (08ஆம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டியில் புலிகள் தாக்குதல்

கொழும்பு,ஜூலை 9

மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் நேற்று அதிகாலை மோதல் ஏற்பட்டது. பின்னர் அப்பகுதியில் நடத்திய தேடுதலில் விடுதலைப் புலிகளினால் கைவிட்டுச் செல்லப்பட்ட வெடிபொருள்கள் சிலவற்றை படையினர் மீட்டுள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 12.20 மணியளவில் வீதிப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரை நோக்கி புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு படையினர் பதில் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். பின்னர் நடத்திய தேடுதலில் கைக்குண்டுகள் இரண்டு, சைனைட் குப்பிகள், கைத் துப்பாக்கிகள் போன்றனவற்றை படையினர் மீட்டுள்ளனர் என்று ஊடக நிலையம் தெரிவித்தது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பதவி வெற்றிடங்கள் - விண்ணப்பியுங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 9

தேசிய சுவடிகள் திணைக்களம் தச்சுத் தொழிலாளர் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

18 - 45 வயதிற்கிடைப்பட்ட தரம் 8 இல் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் தொழில்நுட்பக் கல்லூரி அல்லது தேசிய பயிலுனர் சபை அல்லது தேசிய பயிற்சி அதிகார சபை போன்ற நிறுவனம் ஒன்றில் 6 மாத தச்சுப் பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் 'தேசிய சுவடிகள் பணிப்பாளர், தேசிய சுவடிகள் திணைக்களம், இல. 7, நீட் அவனியூ, கொழும்பு 7' என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களடங்கிய வர்த்த மானியை உதயன் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

* * *

தேசிய சுவடிகள் திணைக்களம் கட்டடப் பராமரிப்பு உத்தியோகத்தர் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் 2 தடவைகளுக்கு மேற்படாது மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/கணிதம் அடங்கலாக 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் பதவிக்குத் தேவையான தொழில் தகமை டிப்ளோமாவையும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் 'தேசிய சுவடிகள் பணிப்பாளர், தேசிய சுவடிகள் திணைக்களம், இல. 7; நீட் அவனியூ, கொழும்பு 7' என்னும் முவரிக்கு விண்ணப்பங்களைப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களடங்கிய வர்த்த மானியை உதயன் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

* * *

தீவகக் கல்வி வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2-1, தமிழ் பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ராஜேந்திரன் கேட்டுள்ளார். (202)

# 'எமிரேட்ஸ்' இரவு விமானசேவை அடுத்த ஞாயிறுமுதல் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 9

டுபாயிலுள்ள ஐக்கிய அரபு ராஜ்ய விமான சேவை (எமிரேட்ஸ் விமான சேவை) எதிர்வரும் ஞாயிறு முதல் இலங்கைக்கான வழமையான பகல் - இரவு விமானச் சேவைகளை மீள ஆரம்பிக்கும்.

மேற்படி விமானச் சேவையின் இலங்கைக்கான முகாமையாளர் திஸ்ஸ பிபில நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்கு இத்தகவலை வெளியிட்டார்.

தாழப்பறந்துவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானம் இரவுக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டதால் மே மாதம் முதல் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் பிந்திய விமான சேவைகளை ரத்துச் செய்திருந்தது.

சர்வதேச விமானங்களுக்கான ஓடு தரைகள் மீது பறந்து விடுதலைப் புலிகளின் விமானம் பல தடவைகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இவை இராக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களாகும்.

இக் குண்டுத் தாக்குதல்களை அடுத்து பிரகடனப்படுத்தப்பட்ட இரவு நேர சேவை ரத்து கடந்த வாரம் நீக்கப்பட்டது. தாழப்பறந்து வரும் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான 'ராடர்' கருவி பொருத்தப்பட்டதையடுத்து இந்த இரவு நேரத் தடை நீக்கப்பட்டுள்ளது.

''எமது விமானச் சேவை நிறுவனம் கொழும்புக்கும் டுபாய்க்குமிடையில் ஒரு வாரத்தில் 17 சேவைகளை மேற்கொள்ளும். கொழும்பு, சிங்கப்பூர், இந்தோனேஷியா ஆகியவற்றுக்கிடையே வாரத்தில் நான்கு சேவைகளை நடத்தும்'' என பிபில, ஏ. எவ். பி.செய்தி நிறுவனத்துக்கு மேலும் விளக்கினார்.

அதேவேளை, தற்போது கொழும்புக்கான பகல் விமானச் சேவைகளை சிங்கப்பூர் விமானச்சேவை நிறுவனமும் மேற்கொண்டு வருகிறது. இதன் பேச்சாளரொருவர் ''உடனடியாக இரவுச் சேவைகளை மேற்கொள்வதற்கான திட்டம் தற்போதைக்கு எம்மிடம் கிடையாது'' என்றார்.

- இவ்வாறு ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது. (சி)


## CD கள் மூலம் Spoken English

வீட்டில் இருந்தவாறே ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ள சகல அடிப்படை பாடத்திட்டங்களும் பயிற்சிகளும் இலகுவான முறையில் தமிழ்மொழி மூலம் 4 ACDகள் + 20 VCD களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வேலையை எதிர்பார்ப்போர், வீட்டில் இருக்கும் பெண்கள், ஆங்கில வகுப்புக்குச் செல்ல கூச்சப்படும் வயது வந்தோர் ஆகியோருக்கு மிகவும் உகந்தது. ஆங்கில ஆசிரியர்களுக்கும் வழிகாட்டியாக அமையும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்கலாம். குடும்பமாகவும் ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ளலாம். முயற்சி உடையவர்கள் இதன்மூலம் நிச்சயமாக ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ளலாம்.

முன்பதிவுகள் செய்து கொள்வதன் மூலமே பெற்றுக்கொள்ள முடியும்

*முன்பதிவுகள் நடைபெறுகின்றன. முன்பதிவுசெய்யும் இடங்கள்*

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். | கத்தோலிக்க விற்பனை நிலையம் (பஸ்தியன் சந்தி) 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 021 222 9041 |
| காருண்யா வைத்திய நிலையம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 021 2223795 | காவேரி பார்மசி, கொக்குவில் சந்தி, கொக்குவில். |
| ராஜலஷ்மி மலிரி பலஸ், நெல்லியடி, கரவெட்டி. (பஸ் நிலையத்திற்கு முன்னால்) | மெடிலான்ட் பார்மசி, ஆலடி சந்தி, மானிப்பாய். |
| றேனி மூக்கு கண்ணாடி அகம், கண்டி றோட், (AGA's Office அருகில்) சாவகச்சேரி. | Thurka Book shop, Bus stand Chunnagam. 021 222 6267 |
| றேனி மூக்கு கண்ணாடி அகம், 88, பிரதான வீதி, பருத்தித்துறை. | மெடிலான்ட் பார்மசி, பிரதான வீதி, சங்கானை. |


## நவாலி கமநலசேவை நிலையத்திற்குப் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,ஜூலை 9

நவாலி கமநல கேந்திர நிலையக் கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

விரைவில் அதனை திறந்து விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளன தலைவர் சி.பொ. வ.மா.க.முதலியார் தெரிவித்தார்.

நவாலி கமநல சேவைகள் நிலைய கட்டட நிர்மாணத்திற்கு நிகொட் நிறுவனம் நிதி உதவி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (1-95)

## வினைத்திறமை காண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை 9

சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அதிகாரிகளுக்கான முதலாவது வினைத்திறமை காண் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, பெலவத்த, பத்தரமுல்ல' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள் ளது.

மேலதிக விவரங்கள் அடங்கிய வர்த்தமானியை உதயன் அலுவலகத்தில் பார்வையிடலாம். (202)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வரிசிலைநாயகி பரமானந்தசிவம்

சிவன் கோவிலடி, வட்டு. மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வரிசிலைநாயகி பரமானந்தசிவம் நேற்று (08.07.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமானந்தசிவத்தின் (அதிபர்) அன்பு மனைவியும் கோமதியின் (அமெரிக்கா) அன்புத் தாயும் கிரிதரனின் (அமெரிக்கா) அன்பு மாமியும் தேனுகாவின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - தங்கரத்தினம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - சின்னமணி தம்பதியரின் அன்பு மருமகளும் அருளானந்தம் (வவுனியா), சச்சிதானந்தசிவம் (பிரான்ஸ்), யோகராசா (பிரான்ஸ்), நித்தியானந்தம், காலஞ்சென்ற காந்தி, வாமதேவன், காலஞ்சென்ற திருமதி சாந்தநாயகி கதிர்காமநாதன், திருமதி புஸ்பலீலா ஞானேந்திரன், திருமதி சறோஜினிதேவி புஸ்பராசா, திருமதி சுசீலாதேவி ஆகியோரின் மைத்துனியும் திருமதி கோகுலநாயகி சச்சிதானந்தபிள்ளை, திருமதி சற்குணநாயகி பரமநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி சடாட்சரநாயகி மகேஸ்வரன் (ஓய்வுபெற்ற அதிகாரி - இறைவரித் திணைக்களம்), கதிர்காமநாதன் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்), திருமதி சடாட்சரநாயகி நடராசா (வவுனியா), செந்தில்நாதன் (புகையிரத நிலைய அதிபர், அனுராதபுரம்), திருமதி திரிசைநாயகி ஜெயானந்தம் (ஆசிரியை, வட்டு. இந்துக் கல்லூரி), சசிதரநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.07.2007) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.நித்தியானந்தன்
(மைத்துனர்)

## திருமதி கோகிலாம்பாள் சிவராசா

**(முன்னாள் ஆங்கில ஆசிரியை, பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்)**



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோகிலாம்பாள் சிவராசா (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை) 08.07.2007 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகநாயகம் - செல்லமுத்து தம்பதியரின் ஏகபுத்திரியும் அமரர் வே.ந. சிவராசாவின் (முன்னாள் பிரதம செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாண சபை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நல்லைநாதன் (முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்), ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற துன்னாலையூர் வே. நடராஜா தம்பதியரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.07.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
காசிநாதர் சசிதரன் *(மைத்துனர்)*.

(62547)

## மகாலிங்கம் அஷி

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் அஷி 07.07.2007 சனிக்கிழமை கனடாவில் அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் மகாலிங்கம் - இரத்தினம் தம்பதியரின் ஏகபுதல்வனும் அஜித்தா, அந்தி, சோனியா ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். அவரது துக்க நிகழ்வுகள் கைதடி மத்தி வளர்மதியிலுள்ள திருமதி சி.முத்துலட்சுமி அவர்களின் இல்லத்தில் நடைபெறுகின்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.சின்னத்துரை
(அம்மப்பா)

*கலைநகர்,*
*கைதடி கிழக்கு.*

(சி-52871)


## திருமண சேவை

*பட்டதாரிகள், பொறியியலாளர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் உட்பட அனேக உள்நாட்டு வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன.*

*உங்கள் பிள்ளைகளின் வளமான திருமண வாழ்வினைத் தெரிவு செய்ய உடனே நாடுங்கள்.*

த.சிவானந்தன், பிரபல சோதிடம்,
5, வைமன் வீதி, நல்லூர்.
தொ.பே. 021 222 8102

(62548)

## மணமகன் தேவை

***1979 ஆண்டு பிறந்த கலைப் பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. கார்த்திகை 2ஆம் பாதம் 73 ¼ பாவக்கிரகம்.***

**விளம்பர இலக்கம் 2988**
**மே/பா உதயன்.**


## சமுத்திராதேவி அடுத்தவாரம் முதல் சேவையிலீடுபடும்

நெடுந்தீவு கடல் போக்குவரத்துச் சேவையில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் படகான சமுத்திராதேவியின் புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அடுத்த வாரப் பிற்பகுதியில் படகு வழமை போன்று சேவைக்கு வந்துவிடும் என நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத் தலைவர் தி.நிக்கலை பரம்பலம் தெரிவித்தார். (1-311)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 | | 08 |
| 06 | | 06 |
| 1936 | | 2007 |



*அமரர்*

## குழந்தையன் நாகமுத்து

மாணித்த செய்திகேட்டு மாமாவே நானும் மாண்டுபோனேன்
மாணித்த மாந்தரெல்லாம் மாணமாவதில்லைக் காண்பிரே மாநிலத்தில்
எரித்திட்ட உடல்மட்டும் எம் இதயத்தை வருத்துவதும் ஏனோ?
விரித்திட்ட மலர்வனமே மாமாவே விண்ணுக்குள் வீடுபெற்று உயர்ந்திடுக.

*வல்லாவற்றை,*
*பர்மலை,*
*உல்வெட்டித்துறை.*

முத்துலிங்கம் குடும்பத்தினர்.
*(மருமகன் - கனடா)*

(சி/52868)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



சர்வசித்து வருடம் வைகாசித் திங்கள் 26 ஆம் நாள் (09-06-2007) சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## வைத்திலிங்கம் ராசக்கண்ணு

அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்தி வழிபாடும் ஆனித் திங்கள் 25 ஆம் நாள் இன்று (09-07-2007) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் நடைபெறும். நண்பகல் 12 மணிக்கு மதியபோசனம் இடம்பெறும்.

சமய நிகழ்வுகளிலும், மதியபோசனத்திலும் குடும்ப சமேதரராய் பங்குகொள்ளும் வண்ணம் அன்பாக வேண்டுகின்றோம்.

சகோதரன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப்பிள்ளைகள்.

(சி-52869)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுத் துறைமுகத்தை ஆழமாக்கும் பணி பிரதேசப் பொதுமக்களினால் முன்னெடுப்பு

நல்லூர்,ஜூலை9

நெடுந்தீவு துறைமுகத்தை ஆழமாக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. இப்பணியை பொதுமக்கள் இணைந்து செயற்படுத்தி வருகின்றனர்.

நெடுந்தீவு கடற்படையினரின் வேண்டுகோளுக்கமைய 30இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இணைந்து ஆழமாக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

சோளகக் காற்றுக் காலத்தில் நெடுந்தீவுத் துறைமுகத்தின் கடல் நீர் பெருமளவில் வற்றிவிடும். இதனால் படகுச் சேவைகளில் பெரும் சிரமங்கள் ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டே ஆழமாக்கும் பணி தற்போது நடைபெறுகின்றது.

கடந்த காலங்களில் பொது வேலைகள் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியன ஆழமாக்கும் பணியை மேற்கொண்டன. எனினும் கடந்த 35 வருடங்களாக எந்த நிறுவனமும் இந்தப் பணியை முன்னின்று செய்யவில்லை. இதனால் சிறிய படகுகளைக் கூட துறைமுகத்திற்குள் கொண்டு செல்வதற்கும் மீளத் திரும்புவதற்கும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அரச படகான குமுதினி மிதக்கக்கூடிய அளவிற்கு துறைமுகத்தின் நீர்மட்டம் இல்லை எனத் தெரிவித்து அடிக்கடி சேவை நிறுத்தம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(202-111)

வடமராட்சியில்

# நோயாளரைப் பார்க்கச் செல்வோர் போக்குவரத்துத் தடையால் பாதிப்பு

உடுப்பிட்டி,ஜூலை9

வடமராட்சியில் இராணுவ வாகன அணித்தொடரின் போக்குவரத்துக்கென குறிப்பிட்ட நேரங்களில் போக்குவரத்து தடைப்படுவதால் வைத்தியசாலையில் நோயாளரைப் பார்வையிடச் செல்வோர் பாதிப்படைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நண்பகல் 12 மணி, பிற்பகல் 4 மணி என்பவை உறவினர்கள் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கான நேரம் என ஒதுக்கப்பட்டுள்ளது.

எனினும் வடமராட்சியின் சில பிரதான வீதிகளில் முற்பகல் 11 மணியிலிருந்து 12 மணிவரையிலும் பிற்பகல் 4 மணியிலிருந்து 5 மணிவரையும் போக்குவரத்துத் தடை செய்யப்படுகின்றன.

இதனால் குறிப்பிட்ட நேரத்தில் வைத்தியசாலைக்குச் சென்று நோயாளர்களுக்கு உணவு மற்றும் வேறு தேவைகளை நிறைவேற்ற முடியாதுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மாலையில் 7 மணிக்கு ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதால் வீடு திரும்பவேண்டிய அவசர நிலையில் நோயாளர்களைப் பேணுவது சிரமமாக உள்ளதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(202-155)

# உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு லண்டனில் ஆங்கிலப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபை மத்திய தர அதிகாரிகளுக்கு ஒரு மாத ஆங்கில பயிற்சிநெறி லண்டனில் நடைபெறவுள்ளது.

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படவுள்ள இப்பயிற்சிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் ஆங்கிலத் தகைமையும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் அனுப்பிவைக்குமாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா கேட்டுள்ளார்.

(202-95)

# சிறந்த தொழில் முயற்சியாளர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை 2007ஆம் ஆண்டிற்கான சிறந்த தொழில் முயற்சியாளர்களைத் தெரிவுசெய்வதற்கென தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில் அதிபர்கள், கைத்தொழில் துறையிலுள்ள சுயதொழிலாளர்கள் ஆகியோரிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களைப் பொருத்தமான ஆவணங்களின் பிரதிகளுடன் அந்தந்த கைத்தொழில் அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்துக்கு எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தோர் 'மாவட்ட காரியாலயம், கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

மாவட்ட ரீதியாக மதிப்பீட்டுக் குழுவால் தெரிவுசெய்யப்படும் மூவருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். மாவட்ட ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்றவர்கள் மாகாணப் போட்டியில் பங்குபற்றலாம்.

(202)



மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனான உடுவில் மகளிர் கல்லூரி அணியினரையும் கல்லூரி அதிபர், பயிற்றுவிப்பாளர், மேற்பார்வையாளர்களையும் படத்தில் காணலாம்.

# சுற்றாடல் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஜூலை9

சரசாலை தெற்கு சரஸ்வதி வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கான சுற்றாடல்சார் செயற்பாட்டு பயிற்சிப் பட்டறையும் தரம் 6,7,8 ஆகிய வகுப்பு மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கான கணித பாட பயிற்சிப் பட்டறையும் எதிர்வரும் புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

இப்பயிற்சிப் பட்டறைகளை தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆரம்பித்து வைப்பார்.

(1-207)

# மண்எண்ணெய் விற்பனை குடாநாட்டில் திடீரென வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ்.குடாநாட்டில் மண்எண்ணெய் விற்பனை திடீரென வீழ்ச்சியடைந்திருப்பதாக எரிபொருள் விற்பனை நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மண்எண்ணெய்யின் விலையை திடீரென லீற்றர் ஒன்றிற்கு 16 ரூபாவால் அதிகரித்தமையே இந்த விற்பனை வீழ்ச்சிக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

தற்போதைய அசாதரண சூழ்நிலை மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களின் வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில் மண்எண்ணெய்யின் விலை திடீரென அதிகரித்தமையால் பாவனையாளர்கள் கொள்வனவு செய்வதற்கு பின்னடித்து வருகின்றனர்.

இதனால் இதன் விற்பனை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதாக எரிபொருள் விற்பனை நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (202-224)

# கைதடி ஆலய உண்டியல் உடைப்பு

கைதடி,ஜூலை9

கைதடி, நவபுரம் துர்க்கையம்மன் ஆலயத்தின் உண்டியல் கடந்த வாரம் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் யாவும் அபகரிக்கப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். (202-75)

# 'சி.டி.எம்.ஏ' இணைப்பைப் பெற பெருமளவானோர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

'சி.டி.எம்.ஏ' தொலைபேசிக்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது.

பண்ணையில் அமைந்திருக்கும் ரெலிக்கொம் நிறுவனத்திற்கு விண்ணப்பிப்பதற்கு மக்கள் படையெடுத்து வருகின்றனர்.

மக்கள் நீண்ட வரிசையில் நின்று இந்த தொலைபேசிக்கான விண்ணப்பத்தைக் கையளித்து வருகின்றனர்.

ஏற்கனவே தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பித்த மக்களும் கிராமசேவகரின் அத்தாட்சிப் பத்திரத்தை வழங்கி தொலைபேசியைப் பெறுவதற்கென விண்ணப்பிப்பதற்காக முண்டியடித்து வருவதை காணமுடிகின்றது.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் ஏற்கனவே மோட்டோ றோலா தொலைபேசி இணைப்பைப் பெற்றவர்களுக்கும் இந்தத் தொலைபேசிகள் முன்னுரிமையில் வழங்கப்பட்டு வருகின்றன.

(202-224)

# சுழிபுரத்தில் பால் விற்பனை நிலையம்

சுழிபுரம்,ஜூலை9

சுழிபுரம் பிரதான வீதியில் சத்தியக் காட்டு சந்தைக்கு முன்பாக பால் விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச கால்நடை வளர்ப்போர் அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (202-28)

# வலி.தென்மேற்கில் குத்தரிசி விலை அதிகரிப்பு

வலி.தென்மேற்கு, ஜூலை9

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் குத்தரிசியின் விலை அதிகரித்துள்ளது. கடந்த மாதம் 85 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு கிலோ நல்லரக குத்தரிசி இவ்வாரம் நூறு ரூபாவாக விற்கப்படுகின்றது. தரம் குறைந்த குத்தரிசி கிலோ 75 ரூபா முதல் 80 ரூபா வரை விற்கப்பட்டு வருகின்றது. (202-1,35)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு குடாநாட்டில் பல்வேறு செயற்றிட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை9

இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ள உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி குடாநாட்டிலுள்ள நகரசபைகள், பிரதேச சபைகள் தோறும் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வலி.கிழக்குப் பிரதேச சபை மயானங்களை சிரமதானம் செய்தல், நடமாடும் ஆயுள்வேத மருத்துவ சேவை, நூலகக் கண்காட்சி, மரங்கள் நாட்டுதல், முன்பள்ளிச் சிறார்களுக்கான விளையாட்டுகள், கலை நிகழ்வுகள், கருத்தரங்குகள், பாடசாலை மாணவர்களுக்கிடையேயான போட்டிகள், முன்பள்ளிச் சிறார்களுக்குச் சத்துணவு, கர்ப்பிணித் தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் சத்துணவு போன்ற செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

சாவகச்சேரி நகர சபையினர் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள், சனசமூக நிலைய அங்கத்தவர்கள் ஆகியோரிடையே போட்டிகளை நடத்தவுள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே உறுப்பெழுத்து, சொல்வதெழுதல் ஆகிய போட்டிகளும் இடைநிலை மாணவர்களிடையே கட்டுரை, பொது அறிவு ஆகிய போட்டிகளும் தரம் 9, 10 ஆகிய வகுப்பு மாணவர்களிடையே கட்டுரை, பொது அறிவு ஆகிய போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

முன்பள்ளிச் சிறார்களிடையே விநோத உடைப் போட்டிகளும் சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்களிடையே கட்டுரைப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தலா 3 மாணவர்களும் முன்பள்ளி சிறார்களுக்கான போட்டியில் ஒவ்வொரு முன்பள்ளியிலிருந்தும் தலா இரு மாணவர்களும், சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கான போட்டியில் ஒவ்வொரு சனசமூக நிலையத்திலிருந்தும் தலா 3 பேரும் போட்டிகளில் கலந்துகொள்ளமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைப் பிரிவிலும் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

உணவகங்களில் சுகாதாரத்தைப் பேணல், விழிப்புணர்வு நிகழ்வுகள், கருத்தரங்குகள், மர நடுகை, நடமாடும் இலவச ஆயுள்வேத வைத்திய சேவை, கண்காட்சிகள், கட்டுரை, ஓவியப் போட்டிகள், சனசமூக நிலையங்களில் விளையாட்டுப் போட்டிகள், நூலகக் கருத்தரங்குகள் போன்றவவை நடத்தப்படவுள்ளன.

( 202-207-135)

# சிலப்பதிகாரத் தொகுப்பு நூல்

யாழ்ப்பாணம்,ஜூலை9

சிலப்பதிகாரம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு உலகச் சிலப்பதிகார மாநாட்டில் வெளியிடப்படவுள்ளன.

இதற்கென ஆய்வுக் கட்டுரைகளை பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம் கோரியுள்ளது.

கட்டுரைகளை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் 'தமிழவேள், இல.3, நிட்ஜ்வே பிளேஸ், கொழும்பு' என்னும் முகவரிக்கு [illegible] லில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(202)

# உடுப்பிட்டியில் மதுபானசாலை உடைத்துத் திருட்டு

உடுப்பிட்டி,ஜூலை9

இமையாணன் - உடுப்பிட்டி வீதியிலுள்ள மதுபானசாலை ஒன்று உடைத்துக் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த முதலாம் திகதி நள்ளிரவில் இடம்பெற்றுள்ளது.

கடையை உடைத்து அங்கிருந்த சாராயம், சிகரெட் போன்ற ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் பணமும் திருடப்பட்டுள்ளதாக நிலைய உரிமையாளரால் வல்வெட்டித்துறைப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(202-155)

# வலி.தென்மேற்கில் நிரப்பப்படாத 5 கிராம அலுவலர் வெற்றிடங்கள்

வலி.தென்மேற்கு,ஜூலை9

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் கிராம அலுவலர்களுக்கான ஐந்து வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருந்து வருகின்றன.

ஓய்வுபெற்ற பின்பு மீள் நியமனம் பெற்ற கிராம அலுவலர்கள் சிலர் இப்பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றி வந்தனர். கடந்த மே மாதத்துடன் இவர்களின் மீள் நியமனக் காலம் முடிவுற்றதாலும் தொடர்ந்தும் பணியாற்றுவதற்கான அனுமதி இவர்களுக்கு கிடைக்காததாலும் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயே உள்ளன.

(202-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷ ஆனித்திங்கள் 30 ஆம் நாள் சனிக்கிழமை (14-07-2007) அன்று பிற்பகல் 12.05 மணி தொடக்கம் 1.30 மணிவரையுள்ள புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கன்னி லக்னமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்

திரு.திருமதி வி.சோமநாதன் தம்பதியரின் கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **மயூரன்** அவர்களுக்கும்

திரு.திருமதி பொன். சுந்தரலிங்கம் தம்பதியரின் ஏக புத்திரி திருநிறை செல்வி **கானப்பிரியா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

திருமண மண்டபம்
Woodbine Banquet Hall,
30, Vice Regent Blvd., Rexdale,ON

(62535)

திரு.திருமதி வி.சோமநாதன்
'குமரன் இல்லம்',
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய், இலங்கை.
தொடர்புகளுக்கு: 112.718.337

திரு.திருமதி பொன். சுந்தரலிங்கம்
இராஜகிரி,
கேணியடி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொடர்புகளுக்கு: 905.294.3380

இருவீட்டார் அழைப்பு

## விற்பனைக்கு

புதிதாக அமைக்கப்பட்ட 6 அடி டீ'பிறிஜ் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
பிள்ளையார் மில்,
202, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(62519)

## மணமகன் தேவை

ஆஸ்திரேலியா MBA மணமகளுக்கு சைவ மணமகன் தேவை. ஸ்பொன்சரில் அழைக்கப்படும் சாதகம் அனுப்பவும்.
ஸ்ரீலஸ்ரீ சு.சிவசண்முகானந்தக் குருக்கள்,
கொல்லங் கலட்டி,
தெல்லிப்பழை. (62521)





வசீகர தோற்றத்திற்கு
**சந்தனாலேப**
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11 - 05 - 1950

உதிர்வு 09 - 07 - 1995

**திருமதி கமலநாதன் சாவித்திரி** (பேபி)

*அம்மா ஆண்டுகள் பன்னிரண்டென்ன?*
*எத்தனை ஆண்டுகள் சென்றாலும்*
*உங்களின் - கனியின் - ராகவின் திரு*
*முகங்கள் எம் கண்களை, உள்ளங்களை விட்டு*
*என்றும் மறையாதம்மா!*

நவாலி கிழக்கு,
மானிப்பாய். (62403)

என்றும் உங்கள் நினைவில் வாழும் அன்பு
**கணவர், பிள்ளைகள்.**

# 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02 * 11 * 1959

உதிர்வு 28 * 06 * 1989

**அமரர் கந்தையா குலேந்திரா**

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கோப்பாய், விசேட ஆணையாளர், வலி.கிழக்கு பிரதேச சபை.)

*திதி: 09-07-2007 சதுசி*

அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்த திருவுருவே!
அணையா தீபமாய் சுடர்விடும் குலவிளக்கே!
கண்ணிமைக்கும் நேரத்தில் காற்றோடு கலந்தீர்
மண்ணிருக்கும் வரை மனதோடு மலர்ந்திருப்பீர்.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில். (62537)

உங்கள் பிரிவால் துயருறும்,
சு.சிவசக்தி (மனைவி)
சு.சிவேந்திரம் (மகன்), சகோதரர்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 15 02 1934

இறைவன் அடியில் 09 06 2007

**திருமதி கிருஸ்ணபிள்ளை கௌரிமனோகரி**

(சுதுமலை)

09.06.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவியின் பிரிவறிந்து பல வகையிலும் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் துக்கம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (09-07-2007) திங்கட்கிழமை நண்பகல் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.
தொ.பே. இல. 6660256

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## ஆங்கில தினப் போட்டிகள்

நல்லூர்,ஜூலை9

நெடுந்தீவு கோட்ட மட்டத்திலான ஆங்கிலதினப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலத்தில் நடைபெறும் என கோட்டக் கல்வி அதிகாரி க.அரசரத்திம் தெரிவித்துள்ளார். (202-111)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு தேசிய மாநாடு

யாழ்ப்பாணம்,ஜூலை9

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் அனுபவங்களை வெளிப்படுத்தும் தேசிய மாநாடு நடைபெறவுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 17,18 ஆகிய இரு தினங்கள் இந்த தேசிய மாநாடு இடம்பெறவுள்ளது. அன்றைய தினங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இதேவேளை- உள்ளூராட்சி மக்கள் பங்களிப்புடனான சுய ஆளுகை எனும் தலைப்பில் கருத்தரங்குகளும் கண்காட்சிகளும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (202-95)

## விற்பனைக்கு

HONDA SUPER CUP C 50 SELF START மோட்டார் சைக்கிள் (நீலம்) விற்பனைக்குண்டு.
தொடர்பு:S.S.**நாதன்,**
இல.16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். T.P.: 0776146434
(62163)

## விற்பனைக்கு

புறொயிலர் (Broiler) கோழி
விற்பனைக்குண்டு.
தொடர்பு : அண்ணா பாம், இணுவில்.

மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ விரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.

## அர்ச்சகர் தேவை

உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள இவ்வாலயத்துக்கு நித்தியபூசைக்கு அர்ச்சகர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஸ்ரீலஸ்ரீ சு.சிவசண்முகானந்தக் குருக்கள், அறங்காவலர்,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. (62520)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

896 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் **15 16 33 50**

06-07-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5029284 - 5040925

ஜக்பொட் பரிசு ரூபா. 5,703,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 260,631 | 10/- | 2,606,310/- |
| 2 இலக்கங்கள் | 23,903 | 20/- | 478,060/- |
| 1 இல. + லக்கினம் | 23,724 | 30/- | 711,720/- |
| 2 இல. + லக்கினம் | 2,160 | 100/- | 216,000/- |
| 3 இலக்கங்கள் | 627 | 500/- | 313,500/- |
| 3 இல. + லக்கினம் | 71 | 5,000/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,703,050/- | - |
| மொத்தம் | | | 4,980,590/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | * 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 311,124 | | 6,004,090/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,994,100/-

தொடர் இல.4151240 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 ஜூலை மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 5037371-1-76 |
| மட்டக்களப்பு | 5038123-2-06 |
| கண்டி | 5030496-8-12 |
| மாத்தளை | 5036948-3-81 |
| மொனராகலை | 5034483-0-65 |


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**வல்லிபுரம் இராசம்மா**


மலர்வு 14-02-1914

உதிர்வு 07-06-2007

சிறப்பாய் வாழ்வளித்து
இறப்பால் எமைப்பிரிந்து
நெஞ்சிலே கனலும் துன்பத்தை
நிறைவால் நீர் தெவிக்கும் நினைவுகள்.

எம் தாயின் மறைவுச் செய்தி அறிந்து வந்து அஞ்சலி செலுத்தி, தந்திமூலமும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (09-07-2007) நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கதிரேசு வல்லிபுரம்**

மண்மகிழ 24-04-1924

கண்நெகிழ 29-07-1997

பண்பொடு பாசப்பரிவினையூட்டி
பாரினில் எம்மைப்பலமுடன் காத்தீர்
உற்றவருக்கு உறுதுணையாகி
உத்தமராக உலகினில் வாழ்ந்தீர்
ஆண்டுகள் பத்து அருளாமற்
போனதையா
ஆற்றொணாத்துயரில் அமிழ்ந்தித்
தவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# 22 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சினிவாசகம் சின்னத்துரை**

மண்ணில் 15-01-1920

விண்ணில் 12-07-1985

இருபத்தி இரண்டு
ஆண்டுகள் ஆகியதே
அப்பாவே ! நீர் பிரிந்து
ஆறவில்லை
எங்கள் மனம்.

என்றும் உன் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை
மாதிரி வினாத்தாள்
வணிகக்கல்வி

ஆக்கம்: திரு.பசில்

### பகுதி I
(சென்றவாரத் தொடர்ச்சி)

14. வர்த்தக வங்கியின் பணி அல்லாதது,
1) வட்டியைப் பெறுதல் 2) வட்டியை வழங்குதல்
3) வங்கிவீதத்தை தீர்மானித்தல் 4) தரகு பெறுதல்
5) மேற்கூறியஎவையுமல்ல
15. தகவல் பரிவர்த்தனையில் தடையாகக் கருதமுடியாதது,
1) சத்தம் 2) அவதானம் 3) உணர்ச்சி வசப்படல்
4) தகவல் மிகை 5) தகவல் பற்றாக்குறை
16. காப்புறுதிச் செய்முறையில் முதலாம் இரண்டாம் நபர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள இணக்கத்தைக் காட்டுவது
1) காப்புறுதிக் கடிதம் 2) காப்புறுதித் தத்துவம் 3) காப்புறுதிப் பூட்கை
4) காப்புறுதிப் படிவம் 5) மேற்கூறிய எவையுமல்ல
17. பொருளின் உரிமை மாற்றலை எடுத்துக் காட்டுவது
1) விலைக்கூற்று 2) விலை விசாரணை 3) பட்டியல்
4) கட்டளை 5) வரவுத்தாள்
18. ஒரு குறித்த உற்பத்திக் கம்பனியின் பொருட்களை மட்டும் விற்பனை செய்ய உடன்பட்டு அதை நடைமுறைப்படுத்தும் அமைப்பு
1) பகுதிக்கடை 2) கிளைக்கடை 3) சிறப்புக்கடை
4) கழிவுக்கடை 5) கட்டுக்கடை
19. ரெலர் அட்டை தொடர்பாகத் தவறான கூற்று,
1) 24 மணிநேர வங்கிச் சேவையைப் பெற உதவும்
2) இதற்கு வட்டி அறவிடப்பட மாட்டாது
3) இரகசியத்தன்மை இருப்பதால் பாதுகாப்பானது
4) இதற்குக் காலாவதித் திகதி இல்லை 5) மேற்கூறிய எவையுமல்ல
20. தேசிய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது
1) கைத்தொழில் மேம்பாட்டுச் சபை
2) தேசிய தொழில் பயிலுனர் அதிகார சபை
3) இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையம்
4) தேசிய வியாபார முகாமை நிறுவகம்
5) தேசிய இயந்திரவியல் ஆய்வு அபிவிருத்தி நிலையம்
21. பூரணப்படுத்துக.

[ ] → விருப்பம் → கொள்வனவு சக்தி → [ ]

22. 2005 ஆம் ஆண்டில் இருந்து நிதிக்கம்பனிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட ........ மேற்கொள்ள மத்திய வங்கி அனுமதியளித்தது.
23. இலங்கை இறுதியாக ........ நாட்டுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைச் செய்துள்ளது.
24. அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| | |
|---|---|
| 2004ல் இலங்கையின் நுகர்வோர் தொகை | |
| 2004ல் இலங்கையின் ஆள்வீதத் தொகை வளர்ச்சி வீதம் | |

25. இலங்கை மத்திய வங்கி அறிக்கையின்படி 2004 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீத பங்களிப்பு கீழே தரப்படுகின்றது.

| துறைகள் | சதவீதம் |
|---|---|
| 1. விவசாயம், காட்டுத் தொழில், கடல் தொழில் | 17.8 |
| 2. சுரங்கத்தொழிலும் கல்லுடைத்தலும் | 2.0 |
| 3. தயாரிப்புத் தொழில் | 15.4 |
| 4. மின்வலு, நீர் | 1.5 |
| 5. கட்டடவாக்கம் | 7.9 |
| 6. மொத்த சில்லறை வர்த்தகம், சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் | 21.1 |
| 7. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பாடல் | 14.4 |
| 8. நிதியியல் பணிகள், உண்மைச் சொத்துக்கள், வர்த்தகப் பணிகள் | 12.1 |
| 9. பொது நிர்வாகம், ஏனைய அரச பணிகளும் பாதுகாப்பும் | 7.8 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 100 |

அ) முதலாம் நிலை உற்பத்தி (முதலாம்நிலைக் கைத்தொழிலின்) சதவீத பங்களிப்பு யாது?
........
ஆ) இரண்டாம் நிலை உற்பத்தி (இரண்டாம் நிலைக் கைத்தொழிலின்) சதவித பங்களிப்பு யாது?
........
இ) மூன்றாம் நிலை உற்பத்தி (மூன்றாம் நிலைக் கைத்தொழிலின்) சதவித பங்களிப்பு யாது?
........
26. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையின் பாதுகாப்பைமேம்படுத்துவதற்காக அண்மையில் கொண்டுவரப்பட்ட சட்டம் எது?
........
27. பொதுக்கம்பனி ஒன்று அதன் பங்குதாரர்களுக்கு ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு அழைப்புவிடும் அதேவேளையில் கம்பனியின் பல தகவல்களை உள்ளடக்கியதாக ........வெளியிடும்.
28. ஒரு வணிகம் ஒழுக்கநெறிகளுடன் நடந்து கொள்வதனை ........ ........ என்பர்.
29. சிறந்த போட்டிச் சூழலில் திறமையானதும் பாதுகாப்பானதுமான போக்குவரத்தினை அபிவிருத்தி செய்து பொதுமக்களின் நலனைப் பாதுகாப்பதில் ஈடுபடும் அமைப்பு எது?
........
30. உள்ளூர் மற்றும் சர்வதேச இலத்திரனியல் வர்த்தகத்தின் மீதான சட்டத்தடைகளை நீக்கி சட்ட தன்மையை ஏற்படுத்த இலங்கை அரசு செய்த முக்கிய நடவடிக்கை யாது?
........

(முற்றும்)

## கல்விப் பொது தராதரப் பத்திர (உ/த) ப் பரீட்சை, ஓகஸ்ட் 2007
## புவியியல்

### பகுதி-II
02. அ) பின்வருவனவற்றை உலகப் புறவுருவப் படம் ஒன்றில் குறித்துபெயரிடுக.
01) தாஸ்கண்ட் 02) சைப்பிரஸ்
03) மொராக்கே 04) அம்சர்டாம்
05) வைற்கடல் 06) மலாக்கா நீரிணை
07) கோவா 08) செகோத்திரா
09) கனரீஸ் நீரோட்டம் 10) மரியானா அகழி
11) லெனின்கிராட் 12) கினி வளைகுடா


ஆ) உலகப்புறவுருவப்படத்தில்பின்வரும்சம்பவங்களுடன்தொடர்புடையஇடங்களைக் குறித்துப் பெயரிடுக.
1) உலக நிலக்கரி இறக்குமதியில் 24% தைக் கொண்டுள்ள நாடு
2) இயற்கை வாயு இறக்குமதியில் (17%) முன்னணி வகிக்கும் நாடு
3) இராணுவப்புரட்சி நடைபெற்ற ஆசிய நாடு
4) உலகில் சனத்தொகை அடர்த்தியை உயர்வாகக் கொண்ட நகரம்
5) பதினோராவது அணிசேரா நாடுகளின் மாநாடு நடைபெற்ற நகரம்
6) அடுத்த ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள நகரம்
7) உலகவர்த்தக சங்கத்தில் ( WTO )புதிதாக (150வது) உறுப்பினராகவுள்ளஆசியநாடு
8) உலக கோப்பி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு

### பகுதி-III
03. அ) சங்கிலி நாடா நிலஅளவீட்டின் மூலம் 1:2000 என்ற அளவுத் திட்டத்தில் அமைந்த முக்கோணப் பரப்பொன்றின் நீளங்கள் தரப்பட்டுள்ளது.
(A-Bகோடு 120m, B-Cகோடு 90m, A-Cகோடு 160m )
i) மேற்படி அளவீட்டின் அடிப்படையில் நில அளவீட்டுப் படம் ஒன்றினை அமைக்குக.
ii) 1:1000 என்ற அளவீட்டின்படி அப்படத்தினை மீள வரைக.




ஆ) நில அளவீட்டில் பயன்படுத்தப்படும் சங்கிலி நாடா அளவீட்டு முறைதவிர்ந்த வேறு அளவீட்டு முறைகள் நான்கினைத் தருக.
இ) ஒரு பிரதேசத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு நில அளவீட்டுப் படத்தையும் ஒரு இடவிளக்கப் படத்தையும் பயன்படுத்துவதன்அனுகூலம், பிரதி கூலங்களை ஆராய்க.

04. "அ"தொடக்கம் "ஈ" வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து விடைத்தாளில் எழுதுக.
அ) முனைவில் இருந்து மத்திய கோட்டை நோக்கிச் செல்லும் போது அகலக் கோடுகளின் இடைவெளி குறைந்து செல்லும் எறியம் எது?
i) மேக்காற்றர் எறியம் ii) சமதூர உச்சி எறியம்
iii) சமதூர உருளை எறியம் iv) பொன்னின் எறியம்
ஆ) பின்வரும் எறியங்களில் முனைவு ஒரு புள்ளியாக அமையாத எறியங்களின் கூட்டத்தினைத் தெரிவுசெய்க.
i) நிழற்கடிகார எறியம், பொன்னின் எறியம்
ii) சமபரப்பு உச்சி எறியம், திண்ம வரைபட எறியம்
iii) ஒரு நியமக் கூம்பு எறியம், சமபரப்பு உருளை எறியம்
iv) செங்குத்து வரைபடம், சமபரப்பு உச்சி எறியம்




இ) மேலுள்ள (படம்2) எறியத்தின் பெயரினைத் தெரிவுசெய்க.
i) மேக்காற்றோவின் எறியம் ii) சமபரப்பு உச்சி எறியம்
iii) சமதூர உருளை எறியம் iv) சமபரப்பு உருளை எறியம்



ஈ) மேலுள்ள (படம்3) எறியத்தின் பெயரினைத் தெரிவுசெய்க.
i) செங்குத்து வரைபட உச்சிஎறியம் ii) சமதூர உச்சி எறியம்
iii) திண்ம வரைபட உச்சி எறியம் iv) எளிய கூம்பெறியம்
உ) பின்வரும் எறியங்களின் (படம்4) வகையினையும் அது வட, தென் அரைக் கோளங்களில் எவ்வரைக் கோளங்களுக்கு உரியது எனவும் குறிப்பிடுக.



ஊ) பின்வரும் எறியங்களின் (படம்5) பெயர்களையும் அது கிழக்கரை, மேற்கரைக் கோளங்களில் எவ்வரைக் கோளங்களிற்கு உரியது எனவும் குறிப்பிடுக.



எ) பின்வரும் எறியங்களுக்கான நில விளக்கப் படங்களை 5cm ஆரைகொண்ட சுருக்கப்பட்ட புவிக்கேற்ப வடவரைக் கோளங்களிற்கு வரைக. அகல நெடுங் கோட்டு இடைவெளிகளை $10^{\circ}$ இடைவெளிகளில் அமைக்குக.
i) சமபரப்பு உருளை எறியம்
ii) செங்குத்து வரைபட உச்சி எறியம்

### பகுதி-IV
05. அ) அட்டவணை இல-1 இல் தரப்பட்டுள்ள தரவுகளைக் காட்டுவதற்கு ஏற்ற உள்ளமைந்த சதுரங்களை வரைக.
ஆ) அட்டவணையின் தரவுகளைப் பிரிக்கப்பட்ட பூமி வரைபடங்களில் எவ்வாறு காட்டலாம் என்பதைப் புனையா வரைபடங்களின் உதவியுடன் விளக்குக.
இ) சுனாமியால் ஊனமுற்றவர்கள், இறந்தவர்கள் ஆகியோரினை நாடு ரீதியாகக் காட்டப் பொருத்தமான படம் ஒன்றினைக் குறிப்பிட்டு விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக.

அட்டவணை இல-1
2004 இல் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை

| நாடுகள் | பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை |
|---|---|
| இலங்கை | 214,224 |
| இந்தோனேசியா | 254,332 |
| மலேசியா | 188,727 |
| இந்தியா | 920,020 |
| மாலைதீவு | 22,400 |
| ஏனைய நாடுகள் | 43,250 |

மூலம்: ஐ.நா இயற்கை அனர்த்த முகாமைத்துவக் குழுவின் அறிக்கை


06. அ) அட்டவணை 2 இல் தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்திச் சராசரி விலகல் அளவுகளைக் காட்டும் அட்டவணை ஒன்றினைத் தயாரிக்குக.
ஆ) சராசரி விலகல் அட்டவணையின் அடிப்படையில் சராசரி விலகல் நிரல் வரைபடம் ஒன்றினை அமைக்குக.
இ) நீர் தயாரித்த விலகல் வரைபடத்தின் அடிப்படையில் கேகாலை மாவட்டத் தின் ஆண்டு ரீதியான மழைவீழ்ச்சிப் போக்குகளைப் பரிசீலிக்க.

அட்டவணை இல-2
கேகாலை மாவட்டத்தின் ஆண்டுரீதியான மழை வீழ்ச்சி


| வருடம் | செ.மீ | வருடம் | செ.மீ | வருடம் | செ.மீ |
|---|---|---|---|---|---|
| 1990 | 188 | 1994 | 180 | 1198 | 224 |
| 1991 | 166 | 1995 | 214 | 1999 | 228 |
| 1992 | 210 | 1996 | 220 | 2000 | 210 |
| 1193 | 214 | 1997 | 198 | 2001 | 154 |

மூலம்: இலங்கை வளிமண்டலத் திணைக்களம்

07. படம் 6 இந்தியாவில் இருந்து ஏனைய தெற்காசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்ட வாகனங்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது.



அ) மேற்படி படத்தின் பெயரினைக் குறிப்பிடுக.
ஆ) இந்தியாவின் வாகன ஏற்றுமதிப் பண்புகளைப் பரிசீலிக்க.
இ) இந்தியாவின் வாகன ஏற்றுமதி தொடர்பாக இவ்வரைபடத்தினைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள், பிரதிகூலங்களை ஆராய்க.



ஈ) i) a,b,c ஆகிய படங்களின் பெயரினைக் குறிப்பிடுக.
ii) மேற்படி படங்கள் ஒவ்வொன்றினதும் அனுகூலங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக.
iii) மேற்படி படங்கள் ஒவ்வொன்றினதும் பிரதிகூலங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக.

(முற்றும்)

## கல்விப் பொது தராதரப் பத்திர (உ/த) ப் பரீட்சை, ஓகஸ்ட் 2007
## அளவையியலும் விஞ்ஞான முறையும்

எடுப்பு முரண்பாடு
### பகுதி-I
எடுப்பு முரண்பாட்டு முறையைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
01. அ) 1) A எடுப்பின் மறுதலை பொய்யாக இருந்தால் E எடுப்பின் எதிர்மறை என்ன பெறுமதியினைக் கொண்டிருக்கும்?
2) E எடுப்பின் எதிர்மறை உண்மையாக இருந்தால் I எடுப்பின் உபமறுதலை என்ன பெறுமதியினைக் கொண்டிருக்கும்?
3) O எடுப்பின் எதிர்மறை உண்மையாக இருந்தால் I எடுப்பின் எதிர் மறை என்ன பெறுமதியினைக் கொண்டிருக்கும்?
4) I எடுப்பின் எதிர்மறையின் மறுதலை உண்மையாக இருந்தால் O எடுப்பின் எதிர்மறையின் வழிப்பேறு என்ன பெறுமதியினைக் கொண்டிருக்கும்?
5) A எடுப்பின் மறுதலையின் வழிப்பேறு பொய்யாக இருந்தால் E எடுப்பின் மறுதலையின் வழிப்பேறு என்ன பெறுமதியினைக் கொண்டிருக்கும்?
ஆ) 1) "எல்லா முரண்பாடுகளிலும் எதிர்மறை முரண்பாடே சிறந்தது" இக்கூற்றை விளக்குக.
2) "பேய்கள் அனைத்தும் கூத்தாடும்" என்ற கூற்று எடுப்பு முரண்பாட்டின் ஒப்பீட்டு அனுமானங்கள் போது ஏற்படும் போலியினை விளக்குக.
3) எடுப்பு முரண்பாட்டுச் சதுரத்தை வரைந்து முரண்பாடுகள் ஒவ்வொன்றையும் விளக்குக.
இ) எடுப்பு முரண்பாட்டு முறையைப் பயன்படுத்திப் பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.
1) A எடுப்பு உண்மையாகவும் E எடுப்பு பொய்யாகவும் இருக்கும் போது I எடுப்பு ........ பெறுமதியைக் கொண்டிருக்கும்.
2) E எடுப்பு உண்மையாகவும் I எடுப்பு பொய்யாகவும் இருக்கும் போது O எடுப்பு ........ பெறுமதியைக் கொண்டிருக்கும்.
3) A எடுப்பு பொய்யாகவும் I எடுப்பு உண்மையாகவும் இருக்கும் போது O எடுப்பு ........ பெறுமதியைக் கொண்டிருக்கும்.
4) I எடுப்பு பொய்யாகவும் O எடுப்பு உண்மையாகவும் இருக்கும் போது E எடுப்பு ........ பெறுமதியைக் கொண்டிருக்கும்.
5) A எடுப்பு பொய்யாகவும் E எடுப்பு உண்மையாகவும் இருக்கும் போது I எடுப்பு ........ பெறுமதியைக் கொண்டிருக்கும்.
ஈ) 1) "இறக்கின்ற மனிதர்கள் உள்ளனர்" எனும் எடுப்பு பொய்யாக இருந்தால் பின்வரும் அனுமானங்கள் என்ன பெறுமதியைக் கொண்டிருக்கும்?
i) இறப்பவர்கள் மனிதர்கள்
ii) மனிதர்களில் ஒருவர் இறப்பவர் அல்லர்.
iii) மனிதர்கள் இறப்பவர் அல்லர்
2) "தாய்கள் குறைப்பான அல்ல" (T) எனும் எடுப்பில் இருந்து பின்வரும் எடுப்புக்கள் என்ன பெறுமதியைக் கொண்டிருக்கும்?
i) தாய்களில் ஒன்று குறைப்பான அல்ல
ii) தாய்கள் குறைக்கும்
iii) பெரும்பாலான தாய்கள் குறைக்கும்
உ) எடுப்பு முரண்பாட்டு முறையைப் பயன்படுத்தி பின்வரும் அனுமானங்கள் வாய்ப்பா/வாய்ப்பற்றவையா எனக்கூறுக.
1) "மலர்கள் யாவும் அழகானவை" என்பது பொய்யாக இருந்தால் பெரும்பாலான மலர்கள் அழகானவை என்பதைத் தீர்மானிக்க முடியாது.
2) மலர்கள் ஒன்று அழகானதல்ல என்பது உண்மையாக இருந்தால் மலர்கள் அழகானவை என்பது பொய்யாகும்.
3) மலர்கள் அழகில்லை என்பது மலர்கள் அழகானது என்பதற்கு உண்மையல்ல.
4) மலர்கள் பல அழகானது எனின் மலர்கள் அழகல்ல.
5) எந்தவொரு மலரும் அழகானது அல்ல எனில் மலர்கள் அழகானது அல்ல என்பதைத் தீர்மானிக்க முடியாது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தின் புதிய அங்கத்தவரின் வரவிற்கு எம்மைத் தயார்படுத்துவோம்

(கடந்த 01.07.2007 இல் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

கருவிலுள்ள சிசுவின் மூளை மற்றும் நரப்புத் தொகுதியின் விருத்திக்கு போலிக் கமிலம் இன்றியமையாததாகும். முதலில் போலிக்கமிலம் என்றால் என்ன என பார்ப்போமாயின், போலிக்கமிலமானது நீரில் கரையக்கூடிய ஒருவகை விற்றமின் 'பி' ஆகும். உடலின் நாளாந்த இயக்கங்களுக்கும், குறிப்பாக துரித வளர்ச்சி மற்றும் கலங்களின் பிரிகை போன்றனவற்றிற்கும் அத்தியாவசியமாகும். போலிக்கமிலமானது உடலிலே சேமிக்கப்படும் தன்மை குறைவானது.




எனவே உணவில் போலிக்கமிலம் தேவையான அளவிலும் குறைவாக உள்ளெடுக்குமிடத்து ஒரு சில வாரங்களிலேயே குறைபாட்டுக் குணங்குறிகள் தோன்ற ஆரம்பிக்கும்.

விசேடமாக கர்ப்ப காலத்திலே போலிக் கமிலத்தின் தேவை இருமடங்காக அதிகரிக்கின்றது. அதாவது 800-1200 mcg போலிக் கமிலம் தேவைப்படுகின்றது. கர்ப்பம் தரிப்பதற்கு சுமார் 6 மாதங்களுக்கு முன்னதாகவே போலிக்கமிலம் உள்ளெடுத்தலும் கர்ப்பம் தரித்த பின்னர் முதல் 3 மாதங்களுக்கு அதிகளவு போலிக்கமிலம் உள்ளெடுத்தலும் அத்தியாவசியமாகும். இவ்வாறு போலிக் கமிலம் உள்ளெடுத்தலானது கருவுள்ள சிசுவின் மூளை மற்றும் நரப்புத் தொகுதி விருத்தியடைதலை உறுதிப்படுத்துகின்றது. போலிக்கமிலத்தின் சிறந்த செயற்பாட்டிற்கு விற்றமின் 'சி' அவசியம். ஏற்கனவே பிறப்புக் குறைபாடுள்ள பிள்ளையினைப் பெற்றெடுத்த தாய், தனது அடுத்த கர்ப்பம் தங்குவதற்கு முன்னர் வைத்திய ஆலோசனை பெற்று, போலிக் கமிலம் உள்ளெடுத்தலை அதிகரிக்கவேண்டும். இச்செயற்பாடானது பிறக்கப்போகும் குழந்தையின் பிறப்பு குறைபாடுகளைத் தடுக்க உதவுவதோடு, குழந்தை புத்திக்கூர்மை உள்ளவனாக இருத்தலையும் உறுதிப்படுத்துகின்றது.

போலிக்கமில குறைபாட்டினால் கர்ப்ப காலத்திலே

★ கருச்சிதைவு

★ பிறப்புக் குறைபாடு

★ முழு விருத்தியடையாத பிள்ளைப் பிறப்பு என்பன ஏற்படுகின்றன.

போலிக்கமிலமானது சில உணவு வகைகளிலே அதிகமாகக் காணப்படுகின்றது. அவையாவன.

★ புதிய பழ வகைகள், குறிப்பாக வாழை, தோடம்பழம்.

★ கொழுப்புள்ள மீன் வகைகள், ஈரல், இறைச்சி

★ பச்சை இலைக்கறி வகைகள்

★ முட்டை, பால்

★ பருப்பு, சோயா, எள், கச்சான்

★ தீட்டாத சிவப்பு அரிசி, கோதுமை, தானியம் என்பனவாகும்.

உயர் மீடிறன் ஒலி அலைகளைப் (அல்ட்ரா சவுண்ட்) பாவித்து கருவிலுள்ள குழந்தையின் குறைபாடுகளை அறிந்து கொள்ளலாம். ஆயினும் அப்பாதிக்கப்பட்ட கருவைக் கர்ப்பத்திலிருந்து அகற்றுவதோ, கர்ப் பச்சிதைவு செய்துகொள்வதோ, இலங்கைச் சட்டவிதிகளுக்கு முரணானதும் குற்றமுமாகும். எனவே குழந்தை கருவிலே உருவாகும் முன்னரே தொடர்ச்சியாக 6 மாதங்களுக்கு போலிக்கமிலத்தினை உள்ளெடுப்பதனால் இவ்வகையான விளைவுகளை இல்லா தொழிக்கலாம்.

**இரும்புச்சத்தும் குருதிச்சோகையும்**

இலங்கையிலுள்ள கர்ப்பிணிப் பெண்களிடையே காணப்படும் பொதுவான நோய் குருதிச் சோகையாகும். நீங்களும் இவ்வகையான குருதிச்சோகை உடையவரா என அறிந்து கொள்வதற்கு, உள்ளூர்க் கிளினிக்குகளில் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளலாம். நீங்கள் குருதிச்சோகை உள்ளவரெனக் காணுமிடத்து இரும்புச் சத்துக் குளிகைகளும் மேலதிக இரும்புச் சத்துள்ள உணவுகளை உட்கொள்வதும் அவசியமாகும். அத்தோடு ஒவ்வொரு கர்ப்பிணித் தாயும் குருதிச்சோகை நோயால் பாதிப்படையாது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளல் அவசியமாகும். தாய் கர்ப்ப காலத்தில் குருதிச்சோகையால் பாதிக்கப்பட்டால், அது பிறக்கப்போகும் குழந்தையில் பலவிதமான பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

அப்பாதிப்புக்களாவன:-

★ கருச்சிதைவு

★ நிறை குறைந்த குழந்தை பிறப்பு

★ குறைமாதத்தில் குழந்தை பிறப்பு

★ குழந்தை இறந்து பிறத்தல் என்பனவாகும்.

அத்தோடு குழந்தையும் குருதிச்சோகை நோயினால் பாதிக்கப்படலாம்.

ஒரு கர்ப்பவதியின் ஒரு லீற்றர் குருதியில் இருக்கவேண்டிய ஈமோகுளோபினின் ஆகக் குறைந்த அளவு 110 கிராம் ஆகும். குருதிச்சோகையினைத் தடுப்பதற்காக சில நடைமுறைகளைக் கையாளவேண்டும். குடும்ப அங்கத்தவர்கள்

★ அனைவரும் ஒரே நேரத்தில் உணவருந்துதல் அதாவது உணவைச் சமமாக பங்கிட்டு உண்ணல்.

★ வருடத்திற்கு ஒருமுறையாவது கொழுக்கிப்புழு தொற்றுதலைத் தடுப்பதற்கு மருந்துகள் எடுத்தல்.

★ மலேரியா நோய்க்கான சிகிச்சையை முழுமையாக எடுத்தல்வேண்டும்.

இரும்புச்சத்து கூடுதலாகக் காணப்படும் உணவு வகைகளாவன:- வல்லாரை, பொன்னாங்காணி, இலைக்கோவா, பசளி, முருங்கையிலை போன்ற கீரை வகைகள், நெத்தலி, சூடை, கும்புளா, ஈரல், இறைச்சி, முட்டை போன்ற மாமிச வகைகள் சோயா, கடலை, குரக்கன், அவரை போன்ற பருப்புவகைகள், பேரீச்சம்பழம், வத்தகைப்பழம், எலுமிச்சை போன்ற பழவகைகளுமாகும். உணவிலுள்ள இரும்புச்சத்தை அதிகளவு எமது உடல் உறிஞ்சிக்கொள்வதற்கு உணவுடன் விற்றமின் 'சி' சேர்த்துக்கொள்ளல் சிறந்தது.

**கணவர், குடும்ப அங்கத்தவர் ஒத்துழைப்பு**

கர்ப்பமுற்றிருக்கும் ஒரு பெண்ணுக்கு கணவரின் உதவியும் ஒத்துழைப்பும் அத்தியாவசியம். ஒவ்வொரு கணவனும் கர்ப்ப காலத்தில் தனது மனைவியின் உடல், உளத் தேவைகள் பற்றி அதிகளவு கவனம் செலுத்த வேண்டும்.

குடும்ப அங்கத்தவரது ஒத்துழைப்பானது சிக்கலற்ற ஒய்வான கர்ப்பத்திற்குத் துணைபுரியும். உடலுக்கும் உள்ளத்திற்கும் தேவையான சக்தியை வழங்கித் தெம்பூட்டுவதற்கு குடும்ப ஒத்துழைப்பு அவசியம்.

**உளரீதியான உற்சாகம்**

கர்ப்பிணி பெண்ணுக்கு உளரீதியான உற்சாகம் அவசியமாகும். நீங்கள் கர்ப்பமாக உள்ளபோது, எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பது அவசியமாகும். கர்ப்பகாலத்தில் நல்ல விடயங்களைப் பேசுதல், நற்சிந்தனைகளைத் தரக்கூடிய புத்தகங்களை வாசித்தல் என்பன உங்கள் கருவிலுள்ள குழந்தை நற்பண்புடையவனாக வருவதை உறுதிப்படுத்துதல். அத்தோடு முழுக் குடும்பமுமே புதிய குழந்தையின் வரவுக்கு ஆயத்தமாதல் வேண்டும். நீங்கள் கர்ப்பமாகி 5ஆவது மாத முடிவில் குழந்தை உதைப்பதை உணரக் கூடியதாக இருக் கும். இந்தவேளையில் கருவிலுள் குழந்தையின் அசைவுகளால் மகிழ்ச்சி யுறும் நீங்கள், உங்கள் கணவரையும், மூத்த பிள்ளையையும் உங்கள் வயிற்றைத் தொட்டு உணர அனுமதிக்கவேண்டும். பிறக்கவிருக்கும் குழந்தை பற்றி அடிக்கடி உங்கள் மூத்த பிள்ளையுடன் கதைத்து, பாசத்தை அதிகரிக்க செய்யவேண்டும். அதைப்பாதுகாப்புடையாக்குவது எமது அனைவரினதும் கடமையாகும்.

(முற்றும்.)

**செல்வி றமாஜினி மோகனதாஸ்**
25ஆம் அணி, சமுதாய மருத்துவதுறை,
மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

---

# தேடுதல் நடத்தும் பொலிஸாரின் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கோரும் உரிமை மக்களுக்குண்டு

## பொலிஸ் மா அதிபர் விக்ரர் பெரேரா சொல்கின்றார்

கொழும்பு, ஜூலை 9

பொதுமக்கள் வாழ்விடங்களில் தேடு தல் நடத்தும் பொலிஸாரிடம் அவர்களை அடையாளப்படுத்தும் படியாகக் கேட்பதற்கு பொது மக்களுக்கு உரிமையுண்டு எனத் தெரிவித்துள்ளார் பொலிஸ்மா அதிபர் விக்ரர் பெரேரா.

அரசாங்க சமாதான செயலகத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பொலிஸ் மா அதிபர் இக்கருத்தைத் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது தொடர்பாக சமாதானச் செயலக அதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பதற்காக பொலிஸ்மா அதிபரும் வேறு உயர் அதிகாரிகளும் அங்கு சென்றிருந்தனர். பொதுமக்களின் நம்பிக்கையைப் பொலிஸார் பெற்றிருப்பதன் அவசியம் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இந்தக் கொள்கை பொலிஸ் படையின் அனைத்துப் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் வலியுறுத்தியுள்ளார்.

குறைபாடுகள் ஏற்படுவது சகஜமானாலும் அந்தச் சந்தர்ப்பங்களில் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இன்றைய காலகட்டத்தில் பொலிஸ் சோதனைகள் தவிர்க்க முடியாதவைதான். என்றாலும் அவை நீதிமன்ற ஆணையுடன் அல்லது பொலிஸ் அடையாளத்தை வெளிப்படுத்திய பின் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்திய பொலிஸ் மா அதிபர் பொதுமக்களுக்கு அவர்களின் இந்த உரிமை குறித்து விளங்கப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பொலிஸ் அலுவலர்களுக்கு தமிழ் அறிவு இருப்பதன் அவசியத்தை வலியுறுத்திய பொலிஸ் மா அதிபர் பதவி உயர்வுகளின் போது இது அத்தியாவசியமாகக் கருதப்பட வேண்டும் என்றார். படைகளுக்கு சிறுபான்மையினரைச் சேர்த்துக் கொள்வது ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்படும் பகுதிகளில் முறைப்பாடு செய்வதில் இடையூறுகள் இருப்பதால் அங்கீகரிக்கப்பட்ட குடிமக்கள் குழுக்களின் உதவியுடன் இதைச் செய்யலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

உள்ளூர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்களின் ஆதரவுடன் இம்மக்கள் குழுக்களை நிறுவுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

---


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 06 - 08 - 1950



இறைவன் மலரடியில் 30 - 06 - 2005

**அமரர் பொன்னுத்துரை பாலச்சந்திரன்**

திதி: தசமி

ஆண்டுகள் இரண்டுஅகன்றதே அப்பா! ஆறுமோ எம் துயரம்
ஆசையோடு பெற்றெடுத்து அன்பூட்டி அறிவூட்டி அமுதூட்டி எமை வளர்த்து
ஆளாக்கி உலகிலே உத்தரமராய் நாம் வாழ உயர்ந்த பண்பூட்டி
எங்களுக்காய் உழைத்த எங்கள் ஆருயிர் அப்பாவே!
எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களோடு நீங்கள் வாழ்ந்த காலங்களை எண்ணிப்பார்க்கையில்
இதயம் விம்முதப்பா விழிநீர் முட்டுதப்பா எங்கள் உயிரோடு
கலந்துவிட்ட உங்கள் நினைவுகள் - எங்கள் உயிர் உள்ளவரை
நிலைத்திருக்கும் அப்பா....

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகளான - மயூரன், நிலோறன்,
பவளச்செல்வி, லக்ஷேன், டம்ஷன், பாலலக்ஷன்.

10A, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி. (62542)


---

# 'சி.டி.எம்.ஏ' தொலைபேசி வழங்கும்போது தீவுப் பகுதி வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்

தங்கள் பத்திரிகையில் கடந்த 24ஆம் திகதி அடுத்த வாரம் "சி.டி.ம்.ஏ. தொலைபேசிகள் வழங்க ஏற்பாடு" என்ற செய்தி வெளியாகி உள்ளதைக் கண்டு மட்டிலா மகிழ்ச்சி அடைந்தேன். இது சம்பந்தமாக வடமாகாணப் பிரதிப் பொதுமுகாமையாளர் அவர்களுக்கு எனது கருத்தைத் தெரிவித்து எமக்கு முன்னுரிமை அளிக்கும் படி அன்புடன் கேட்கின்றோம்.

தீவக வைத்தியசாலைகள் அனைத்திலும் "மோட்டோறோலா" தொலைத்தொடர்பு சாதனமே உள்ளன. அது செயலிழந்து நிற்பதனால் தீவக வைத்தியசாலைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு வைத்தியசாலைகளில் உள்ள அவசர நோயாளர்கள், பிரசவத் தாய்மார்கள், பாம்புக் கடிக்கு உள்ளானவர்கள் போன்றோர் யாழ்.வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்கு மாற்றப்படும்போது தொலைத்தொடர்பு சாதனம் மூலம் வேலணை, ஊர்காவற்றுறை வைத்தியசாலை அம்புலன்ஸை குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு அழைப்பித்து அங்கிருந்து யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டு வருகின்றார்கள். ஆனால், தொலைத்தொடர்பு சாதனம் செயலிழந்து இருப்பதனால் வைத்தியர்கள் அத்தீவின் கடற்படையினர் மூலம் வேலணை, ஊர்காவற்றுறை கடற்படையினருக்கு அறிவித்து அவர்கள் வந்து எமக்குக் கூற நாம் அம்புலன்ஸை குறிகாட்டுவான் அல்லது கண்ணகி அம்மன் இறங்குதுறைக்கு அனுப்பி வைப்போம். பல தடவைகள் கடற்படையினர் தங்கள் அம்புலன்ஸை குறிகாட்டுவானில் இருந்து வேலணைக்கு, ஊர்காவற்றுறைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். அவர்களது சேவை பாராட்டப்பட வேண்டும்.

ஆனால், இரவு ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நேரத்தில் அவர்களது சேவை கிடைப்பது அரிது. தொலைத்தொடர்பு செயலிழந்து இருப்பதால் இரவு வரும் பிரசவத் தாய்மார்கள், அவசர நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப அம்புலன்ஸைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உதாரணம்: அண்மையில் 4 மணிக்கு அரளிப் பருப்புச் சாப்பிட்ட பெண் நோயாளி இரவு 9 மணிக்கு நயினாதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து கடற்படையினர் படகு மூலம் குறிகாட்டுவான் கொண்டு செல்லப்பட்டார். வேலணைக் கடற்படையினர் எங்கள் வண்டியை குறிகாட்டுவானுக்கு அனுப்பும்படி வந்து கூறினர். ஆனால், அன்று அவ்வண்டி ஊர்காவற்றுறையில் கடமையில் ஈடுபட்டதால் அவ்வைத்திய சாலையுடன் தொடர்பு கொள்ளும்படி கூறினேன். முடியவில்லை என்று இரவு 11.15 மணிக்கு தங்கள் அம்புலன்ஸில் இங்கு கொண்டு வந்தனர். நான் அவரைப் பரிசோதித்து ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பும்படி கூறியும் அவர்கள் இங்கு பாரம் தந்து தாங்கள் ஊர்காவற்றுறைக்கு காவல்துறையினர் மூலம் தொடர்பு கொண்டு அனுப்புவதாகக் கூறிச் சென்றனர். ஆனால் வண்டி வரவில்லை.

நோயாளி மிகவும் கடுமையான நிலைக்கு வந்து கொண்டிருந்தார். இக்கிராமிய வைத்தியசாலையில் செய்யக்கூடிய வைத்தியம் செய்து அதிகாலை இங்குள்ள ஊழியர் ஒருவரை மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்றுறைக்கு அனுப்பி அம்புலன்ஸில் எடுத்து யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தோம். அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு வைத்தியம் செய்து நலமடைந்து வருகின்றார். இரவு நேரங்களில் சிலர் தங்கள் செலவில் இங்கிருந்து தனியார் வாகனத்திலும் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர்; படையினர் அனுமதி பெற்று.




ஐயா! தீவக நோயாளர்கள் நலன் கருதி "சி.டி.எம்.ஏ." தொலைபேசி இணைப்பை முன்னுரிமை அடிப்படையில் தீவக வைத்தியசாலைகளுக்கு தரும்படி இத்தீவக மக்கள் சார்பிலும் நீண்டகாலமாகத் தீவகத்தில் கடமைபுரியும் வைத்தியர் என்ற முறையிலும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

டாக்டர் ஆ.திருநாவுக்கரசு
பொறுப்பு வைத்திய அதிகாரி,
வேலணை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மக்கள் கவனத்தைத் திசை திருப்ப போரியல் போக்கை நாடும் அரசு

இலங்கைத் தீவின் நிலைமை இன்று மிக மோசம். சகல துறைகளிலும் பெரு வீழ்ச்சி.

பொருளாதாரம் படுத்துவிட்டது. வாழ்க்கைச் செலவு என்றுமில்லாதவாறு எகிறிவிட்டதால் மக்களின் அன்றாட வாழ்க்கை அவலமாகி விட்டது.

ஒரு புறம் விலைவாசி உயர்வு. மறுபுறம் ரூபாவின் பெறுமதி பெருவீழ்ச்சி. ஏற்றுமதி சரிந்து விட்டது. வெளிநாட்டு முதலீடுகள் குறைந்து வருகின்றன. அந்நிய முதலீட்டாளர்கள் மூடை, முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு வெளியேற ஆரம்பித்து விட்டனர்.

யுத்தச் செலவினம் எல்லை கடந்ததால் நாடு தடுமாறுகின்றது. தேசத்தின் வருமானமும் தேய்ந்துவிட்டது.

வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கையர்கள் அங்கிருந்து வெளிநாட்டுப் பணத்தில் அனுப்பும் ஊதிய உழைப்புத்தான் கொஞ்ச நஞ்ச அந்நிய செலாவணியையாவது ஈட்டித்தருகின்றது. அதுவும் இல்லாவிட்டால் நாட்டின் திறைசேரி எப்போதோ திண்டாட்டத்தில் மூழ்கியிருக்கும்.

மஹிந்த அரசின் யுத்த வெறிப் போக்குக் காரணமாகவும் தவறான பொருளாதாரக் கொள்கைப் பின்பற்றலாலும் நாட்டின் கஜானா இவ்வளவுக்கும் காலியாகியிருக்கும்.

ஜனாதிபதி மஹிந்தரின் அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்யும் குறுகிய நோக்கத்துக்காக அளவுக்கு மிஞ்சி அமைச்சர்களை நியமித்து பொது நிதியை வீண் விரயம் செய்ததைத் தவிர பயனேதும் கிட்டவில்லை.

அரச நிர்வாகத்தின் சகல மட்டங்களிலும் ஊழலும் மோசடியும் தலைவிரித்தாடுவதும் இந்தப் பொருளாதாரப் பின்னடைவுக்கு குறிப்பிடத்தக்க முக்கிய காரணங்கள்தாம்.

போதாக்குறைக்கு பிரிட்டன், நெதர்லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் இலங்கை அரசின் போக்கால் அதிருப்தியுற்று தமது உதவித் திட்டங்களை நிறுத்திவிட்டன. ஏதோ ஜப்பான் மாத்திரம் பெயருக்குத் தனது உதவித் திட்டங்களைத் தொடருகின்றது. அதுவும் சில கட்டுப்பாட்டு நிபந்தனைகளுடன்.

இந்த மோசமான பின்னடைவு நிலை - பொருளாதார இக்கட்டு - நாட்டின் சாதாரண மக்கள் ஒவ்வொருவருடைய வாழ்வையும் பெரிதும் பாதித்து நிற்கின்றது.

அரசின் யுத்தத் தீவிரப் போக்கின் பிரசாரத்தில் மகிழ்ந்து போயிருந்த தென்னிலங்கை பாமர மக்கள் நாட்டின் பொருளாதாரம் தமது வயிற்றைக் கிள்ளி, கையைச் சுடும்போது அது குறித்தும் சிந்திக்கத் தலைப்பட்டு விட்டனர். யதார்த்தம் அவர்களுக்கு புரியத் தொடங்கிவிட்டது. நிதர்சனத்தை உணர்ந்துகொள்ள அவர்கள் தலைப்பட்டு விட்டனர்.

அரச உயர் மட்டங்களினால் தென்னிலங்கையில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகள் மூலம் திரட்டப்பட்டிருக்கும் புள்ளி விவரங்கள், அங்கு மஹிந்த அரசின் செல்வாக்கு பெரும் சரிவைக் கண்டு வருகின்றது என்ற அதிர்ச்சித் தகவலை - உண்மையை - உறுதியாக வெளிப்படுத்தியிருக்கின்றனவாம். இதனால் அசந்து போயிருக்கும் அரசுத் தலைமைப் பீடம் தன்னுடைய வாக்கு வங்கியாக - செல்வாக்குப் பலமாக - விளங்கும் தென்னிலங்கை பாமர மக்கள் வட்டத்தின் கவனத்தை பொருளாதார நெருக்கடி பற்றியஅவதானத்திலிருந்து திசை திருப்பி, தனக்கு சாதகமான பக்கத்துக்கு மீள இழுக்கத் திட்டமிடுகிறது.

அதற்கு வாய்ப்பான விவகாரம் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றி பற்றிய பெருமெடுப்புப் பிரசாரம் தான் என்பதை உய்த்தறிந்து, அடையாளம் கண்டுள்ள அரசுத் தலைமை அதற்கான நடவடிக்கைகளிலும் முழு மூச்சாக ஈடுபட்டிருக்கின்றது.

அந்தச் செயற்பாட்டில் பிரதான அங்கமாகியிருப்பதுதான் தொப்பிகல வெற்றி பற்றிய ஆரவாரமாகும். இதற்காக அரச ஊடகங்களும், தென்னிலங்கையின் ஏனைய தொடர்பாடல் சாதனங்களும் முழு அளவில் உசுப்பேற்றிவிடப் பட்டிருக்கின்றன.

மாவிலாறு வெற்றித் திருநாளின் ஓராண்டு நிறைவை எதிர்வரும் 26 ஆம் திகதி பெரும் பிரசார முன்னெடுப்பாக மேற்கொள்ளும்போது, தொப்பிகல ஆக்கிரமிப்பு வெற்றியையும், அத்தோடு கிழக்கு மாகாணம் முழுவதும் விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதான அறிவிப்பையும் வெளியிட்டு, அந்த இராணுவ வெற்றிகளின்பால் அப்பாவித் தென்னிலங்கைச் சிங்களப் பாமரர்களின் கவனத்தைத் திசை திருப்புவது. அதன் மூலம் மோசமான பொருளாதார நிலையால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து அவர்களை சிந்திக்காமல் இருக்கச் செய்வது என்று திட்டம் வகுத்துச் செயற்படுகின்றது அரசுத் தலைமை.

நாட்டின் உண்மையான சிக்கல்களை - நெருக்கடிகளை - மூடி மறைத்து, அவற்றின்பால் மக்களின் கவனம் செல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற் காக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மஹிந்த அரசின் போர் வெறிப்போக்கு விபரீதமான விளைவுகளை அவருக்குக் காலப்போக்கில் ஏற்படுத்திக் கொடுக்கும் என்பது திண்ணம்.

# அதிபர் சேவை-3 நேர்முகப் பரீட்சை வடக்கில் தொடர்ந்து நடைபெறும்

## மாகாண கல்விச் செயலர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை9

இப்போது நடைபெற்றுவரும் அதிபர் சேவைக்கான நேர்முகப்பரீட்சைகளை வடக்கில் தொடர்ந்து நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வடக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் எஸ்.இளங்கோவன் இதனைத் தெரிவித்தார்.

அதிபர் சேவைக்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சைகள் நிறுத்தப்படுவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

எனினும் வடக்கு மாகாண சபைக்குட்பட்ட மாவட்டங்களில் நடைபெற்றுவரும் நேர்முகப் பரீட்சையைத் தொடர்ந்து நடத்துமாறு மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

### அமைச்சரின் அறிவிப்பு

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் கடந்த வியாழக்கிழமை எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, அதிபர் சேவை - 3 இற்கான நேர்முகப் பரீட்சைகள் நிறுத்தப்படுவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அறிவித் திருந்தார். அது குறித்த செய்தி வெள்ளிக்கிழமை உதயனில் வெளியாகி இருந்தது.

இதற்கிடையில் பரீட்சைத் திணைக்களம் நடத்திய எழுத்துப்(போட்டிப்) பரீட்சையில் சித்தியடையாதவர்களும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் நேர்முகப்பரீட்சை முடிந்த பின்னர், எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறாதவர்களின் விவரங்களை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்சமயம் மாகாண சபை அதிகாரிகள் ஐந்து மாவட்டங்களுக்கும் சென்று நேர்முகப்பரீட்சைகளை நடத்தி வருகின்றனர். அவர்களிடம் இருந்து கிடைக்கும் மதிப்பீடுகளை அடிப்படையாக வைத்துத் தகுதியானவர்களை வட மாகாணக் கல்வி அமைச்சு தெரிவு செய்யும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

# மாதகல் கிராம சேவையாளர் மின்சாரம் தாக்கி மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை9

மின்சாரம் தாக்கி கிராம சேவையாளர் ஒருவர் மரணமானார். இச்சம்பவம் நேற்று மாதகலில் இடம்பெற்றது.

மாதகலைச் சேர்ந்த ஏ.சி.கிருபாகரன்(வயது 36) என்ற கிராம சேவையாளரே உயிரிழந்தவராவார்.

வீட்டில் தொலைக்காட்சிக்கான 'கேபிளை' சரிசெய்து கொண்டிருந்த அவர், மின்சாரத்தால் தாக்குண்டு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. அவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டது. மரண விசாரணைகள் இன்று இடம்பெறவுள்ளன. (அ-1)

# மானிப்பாய் சந்தையில் வைத்து கோழி வியாபாரி சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 9

மானிப்பாய் சந்தையில் நேற்றுக் காலை 7 மணிக்கு கோழி விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த சுரேஷ் என அழைக்கப்படும் நாகராசா வேல்முருகன்(வயது 31) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் குறித்து மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

இறந்தவர் கோழி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவேளை, அங்கு வந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

# பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை9

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்த நிர்வாக சபைக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களையும் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-1)

# மாணவர் மதிய உணவுக்கான பொருள்கள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

உலக உணவுத்திட்ட பயனாளிகளின் விநியோகத்திற்கென 'இந்துருவலி' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட பொருள்கள் நலிந்த பிரிவினருக்கான உணவு வழங்கலுக்கும் பாடசாலை மாணவர்களுக்கான கல்விக்கான உணவு செயற்றிட்டத்திற்கும் வழங்கப்படவுள்ளன.

இத்தகவலை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பிலிருந்து 'இந்துருவலி' கப்பல் மூலம் 614.5 மெற்றிக்தொன் அரிசி, 143.5 மெற்றிக்தொன் பருப்பு, 55 மெற்றிக்தொன் சீனி என்பவை எடுத்துவரப்பட்டன.

இந்தப் பொருள்களே மேற்படி திட்டங்களுக்கு வழங்கப்படவுள்ளன. இத்திட்டங்களுக்கான விநியோகத்திற்குரிய வழங்கற் கட்டளைகளை சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இன்று திங்கட்கிழமை மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்திலிருந்து பெற்று உடனடியாக கிளைகளுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்குமாறு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்களும் மேற்படி உணவுப் பொருள்கள் தமது பாடசாலைக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதுடன் எந்தவிதத் தடங்கலுமின்றி கல்விக்கான உணவு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ-202)

# கல்கிஸையில் 41 பேர் கைது

கொழும்பு,ஜூலை9

கல்கிஸைப் பகுதியில் நேற்று படையினர் நடத்திய தேடுதலில் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 41 பேரில் இருவர் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் என்றும் ஏனைய 39 பேரும் தங்களை அடையாளப்படுத்துவதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்காத காரணத்தால் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தாங்கள் அப்பகுதியில் தங்கியிருபதற் கான ஆதாரங்களை நிரூபித்த பின்னர் விடுதலை செய்யப்படுவார்கள் - என்று படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (சி)

# நிதி உதவிகளைக் கோருவதற்கு மிலிந்த அமெரிக்கா பயணம்

கொழும்பு, ஜூலை 9

உல்லாசத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்கா சென்றுள்ளார். உலக வங்கியின் புதிய தலைவரான றொபர்ட் பி. சொய்லிக் மற்றும் அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி சபையான யு. எஸ். எய்ட்டின் புதிய தலைவரான ஹெனிரித்த, எச். போரே ஆகியோரை மிலிந்த மொறகொட சந்திக்கவுள்ளார்.

உலக வங்கி மற்றும் அமெரிக்காவின் உதவி வழங்கும் சபையின் புதிய தலைவர்கள் இருவருமே தமக்கு நீண்டநாள் நண்பர்கள் என்றும் அவர்களைச் சந்தித்து ஸ்ரீலங்காவின் நிலைமைகளை விளக்கவுள்ளார் எனவும் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட அனைத்துலக நாடுகள் நிதி உதவி வழங்குவதை நிறுத்தியுள்ளன. இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அமெரிக்காவின் சார்பில் சிறப்புப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மிலிந்தவின் அமெரிக்கப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. மிலிந்தவின் அமெரிக்கப்பயணத்தை உன்னிப்பாக அவதானிப்பதாக இணைத் தலைமை நாடுகளின் வட்டாரங்களும் தெரிவித்துள்ளன.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி மூனையும் மிலிந்த மொறகொட சந்திக்கவுள்ளார்.

அமெரிக்கப் பயணத்தை நிறைவு செய்துவிட்டு ஸ்ரீலங்கா திரும்பும் வழியில் இந்தியாவுக்கும் மிலிந்த மொறகொட பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 26 | செவ்வாய்க்கிழமை 10.07.2007 |
| திதி : ஏகாதசி | பின்னிரவு 01.25 |
| நட்சத்திரம் : | பரணி மு.ப. 09.46 |
| சுபநேரம் | : 10.28 - 11.58 |
| ராகுகாலம் | : 02.58 - 04.28 |

# கிழக்கில் பொலிஸ் நிர்வாகத்தை பரவலாக்க துரித நடவடிக்கை

கொழும்பு, ஜூலை9

கிழக்கு மாகாண சிவில் நிர்வாகத்தை மேலும் பலப்படுத்துமுகமாக மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பல புதிய பொலிஸ் நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்று பொலஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, கரடியனாறு மற்றும் ஆயித்தியமலை ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குள் பொலிஸ் நிலையங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலாக அந்த மாவட்டத்தில் 25 காவல் நிலையங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளியில் பொலிஸ் நிலையம், உல்லாசப் பயணிகள் பொலிஸ் கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் அதேவேளையில், [illegible]யிலும் இலுப்பைக்குளத்திலும் மூன்று புதிய பொலிஸ் நிலையங்களும் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் அக்போபுர மற்றும் சூரியபுரவில் இரண்டு பொலிஸ் நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலாக 6 புதிய பொலிஸ் நிலையங்கள் சேருநுவர மற்றும் தம்பலகாமம் பிரதேசங்களில் நிறுவப்படும். அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் மற்றும் பக்கியலவில் 2 புதிய பொலிஸ் நிலையங்களும் ஆரம்பிக்கப்படும். இவற்றுக்கும் மேலாக அம்பாறை மாவட்டத்தில் 8புதிய பொலிஸ் நிலையங்களையும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் பொதுசனப் பாதுகாப்பு, சிவில் நிர்வாகம் மற்றும் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு பெருமளவில் நடவடிக்கை மேற்கொள்வதே இப் பொலிஸ் நிலையங்களை அமைப்பதன் நோக்கமென அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.டி.பி.- கருணா குழு மோதல் கிழக்கில் தீவிரமடையும் அறிகுறி

## இணையத்தளங்கள் ஊடாக இருதரப்பும் 'சமர்'

கொழும்பு, ஜூலை 9

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும், கருணா பிரிவின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் தத்தம் இணையத்தளங்கள் வாயிலாக, ஒன்றை ஒன்று மும்முரமாகச் சாடத் தொடங்கியுள்ளன என்று ஆங்கில வார இதழொன்று தெரிவித்துள்ளது.

இந்தச் சாடல் சமர் குறித்து, அது மேலும் பின்வருமாறு விவரித்துள்ளது:-

இவ்விரு அமைப்புகளும் கிழக்கு மாகாணத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஈடுபடுவதற்காக தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதில் அதீத ஆர்வம் காட்டி வருகின்றன.

அதேவேளை, எதிரும் புதிருமான சாடல் சமர்களையும் பிரகடனப்படுத்தியுள்ளன. இவற்றுக்காக, இரு தரப்புகளும் தம் இணையங்களை தக்கவகையில் பெரிய அளவில் பயன்படுத்தி வருகின்றன.

ஊழல்கள், பலவந்த கப்பம் வசூலிப்பு, சிவிலியன்களுக்கு எதிரான தொல்லைகள் ஆகியவை தொடர்பாக, இவ்விருதரப்புகளும் மற்றது ஒன்றின் மீது குற்றச் சாட்டுகளை சுமத்தி வருகின்றன.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களுக்கும் கருணா பிரிவினருக்குமிடையே மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற சமீபத்திய மோதல்களை அடுத்து இந்த உக்கிர 'இணையப்போர்' தலைதூக்கியுள்ளது.

சமீபத்திய மோதல்களில் கருணா அணியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவரின் மரணச்சடங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

### குற்றச்சாட்டுக்கள்

கருணாவுக்கு ஆதரவான மூன்று இணையங்களிலொன்றின் வாயிலாக, கருணா பிரிவினர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு எதிரான செய்தியொன்றினை விடுத்துள்ளனர்.

அதில் "ஈ.பி.டி.பி (ஈழமக்கள் ஜனநாயக்க கட்சி) யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் 'காட்டுச்சட்டத்தை' நடைமுறைப் படுத்தியுள்ளது. அதனையே கிழக்கு மாகாணப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்த அது முனைகின்றது'' என குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கு ஈ.பி.டி.பி. அதன் இணையத்தினூடாக பதிலடி கொடுத்துள்ளது. அதில், ''கருணா குழுவினரை அரசியல் நீரோட்டத்தில் சங்கமமாக்க நாம் உதவியுள்ளோம். எனினும், முன்னைய புலிப்போராளிகளான இவர்கள் தம் மீதான வரிகளை (கோடுகளை) நீக்கிக் கொள்ளவில்லை'' என கூறப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பாக குறிப்பிடுகையில், ''கிழக்கு மாகாணத்திலுள்ள ஒன்பது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இவை சம்பந்தமான திட்டங்கள் குறித்து, கொழும்புக் கூட்டத்தில் விவாதிக்கப்படும். இதன் பொருட்டு, கட்சி உத்தியோகஸ்தர்களை மட்டக்களப்பிலிருந்து அழைத்திருந்தேன். இதற்குப் பின்னரே இந்த முறுகல் நிலை ஆரம்பமாகியுள்ளது'' எனத் தெரிவித்தார்.

### கொம்மாந்துறை மோதல்

கொம்மாந்துறை சம்பவத்தை அடுத்தே, ஈ.பி.டி.பி.யினருக்கும் கருணா குழுவினருக்குமிடையிலான முதல் பாரிய மோதல் வெடிக்கலாயிற்று. செங்கலடியிலுள்ள கொம்மாந்துறை ஈ.பி.டி.பி.பணிமனையை கருணா பிரிவினரின் ஆயுதக் குழுவொன்று தாக்க முற்பட்டது.

இதையடுத்தே இரு சாராருக்குமிடையிலான சமர் மூண்டது. இரு மணித்தியாலம் வரை நீடித்தது. ஈற்றில் பொலிஸாரினதும் இராணுவத்தினதும் தலையீட்டால் இச்சமர் தக்கதருணத்தில் தவிர்க்கப்பட்டது.

இதையடுத்து வியாழக்கிழமை, ஈ.பி.டி.பியினதும், கருணாகுழுவினதும் உள்ளூர் தலைவர்கள் இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டார்கள். மேலும் வன்முறைகளில் ஈடுபடாதிருக்குமாறு இவர்கள் எச்சரிக்கப்பட்டார்கள்.

எது எப்படியிருப்பினும் இதற்குச் சில மணித்தியாலங்களுக்குப் பின்னர் மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி. செயற்பாடுகளுக்கு தாம் தடை விதிப்பதாகக் குறிப்பிட்டு கருணா குழுவினரால் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டன.

எனினும், கருணா குழுவினரின் மிரட்டலை தேவானந்தா நிராகரித்தார். அத்துடன், தமது கட்சி திட்டமிட்டபடி தேர்தல்களில் போட்டியிடும் என்றும் தெரிவித்துக் கொண்டார்.

இச்சமயத்தில், ஈ.பி.டி.பிக்கு ஆதரவான 'தினமுரசு' இதழ்களை விற்பனை செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் கிழக்கில் கருணாகுழுவினர் முட்டுக்கட்டைப் போட்டுள்ளனர் என உள்ளூர் வாசிகள் தெரிவித்துள்ளார்கள்.

- இவ்வாறு ஆங்கில வார ஏடு தகவல் வெளியிட்டிருக்கிறது. (சி)

### கிபிர் விமானத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிதறியது என்று பாது காப்புத் தரப்புத் தெரிவித்தது.

விமானத்துக்கு சேதம் ஏற்படவில்லை என பாதுகாப்புத் தரப்புத் தெரிவித்துள்ளது. எனினும் விமானத்துக்கு சிறிது சேதம் ஏற்பட்டதாக விமானப் படை அதிகாரியை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

துப்பாக்கி வெடித்த சத்தத்தைக் கேட்டு அருகில் உள்ள பொலீஸ் நிலையத்தில் இருந்து பொலீஸார் அங்கு விரைந்தனர்.

அருகில் அமைந்துள்ள விமான நிலையப் பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் சிலமணி நேரம் பதற்றம் நிலவியது. (அ-1)

### திருமலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரை நோக்கி, குறைந்த பட்சம் 15 படகுகளில் புலிகள் கடல்மார்க்கமாக வந்துள்ளார்கள். அதேவேளை மற்றொரு குழுவினர் தரைமார்க்கமாக அணுகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புலிகளின் இவ்விரு அணிகளும் கடற்படையினரை நோக்கி, இருமுனைத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையே மூர்க்கமான சமர் இடம்பெற்றுள்ளது. இறுதியில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டுள்ளன - என்றும் கடற்படைப் பேச்சாளர் கூறினார். (அ-சி)

### இரு தரப்புகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது நோக்கமாகும். இந்த நாட்டில் எமக்கு என்று எதுவித பொருளாதார உத்தியோடும் நாம் ஈடுபடவில்லை - என்று அவர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

ஹான்ஸ் பிரட்ஸ்கர் இம்மாதத்துடன் தமது தூதுவர் பணியை நிறைவு செய்து ஒஸ்லோ திரும்பவுள்ளமை தெரிந்ததே. (அ-1)

# சிறிபதியுடன் தொடர்புடையோர் வீடுகள் மீது நேற்றுத் தாக்குதல்

வத்தளை, ஜூலை 9

முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராய்ச்சியுடன் தொடர்புடைய இருவரின் வீட்டின் மீது நேற்று அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

வத்தளை குணுப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள ஐ.தே.கட்சியின் களனி பிரதேச சபை உறுப்பினர் காமினி டயஸ் வீட்டின் மீது நேற்று அதிகாலை ஓட்டோ ஒன்றில் வந்த சிலர் தாக்குதல் நடத்தினர்.

இதன்போது வீட்டிற்கு பலத்த சேதம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மாலை பேச்சு நடத்துவதற்காக சிறிபதி சூரியாராச்சி தமது வீட்டிற்கு வந்தமையினால் தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று ஐ.தே. கட்சியின் களனி பிரதேசசபை உறுப்பினர் தெரிவித்தார்.

இதேவேளை, சிறிபதி சூரியாராச்சியின் பிரத்தியேக செய்லாளரின் வீடும் தாக்கப்பட்டுள்ளது.

சிறிபதி சூரியாராச்சி சார்பாக களனிப் பகுதியில் பல கூட்டங்கள் ஒழுங்கு செய்தமையால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று பிரத்தியேக செயலாளர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்களை தமக்குத் தெரியும் என்றும் இது தொடர்பாக கிரிபத்கொடப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### கப்பல்சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிமித்தம் செல்லும்அரச ஊழியர்கள் பயண அனுமதியை நேரகாலத்துடன் பெற்றால் பயணத்தை சிரமம் இன்றி மேற்கொள்ள முடியும் என்றும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ-1)

# மிஹின் எயார் நிறுவனத்துக்கு எரிபொருள் விநியோகத்தடை

மிஹின் எயார் விமான நிறுவனத்துக்கான எரிபொருள் விநியோகத்தை இலங்கைப்பெற்றோலிய கூட்டுத்தாபனம் இடைநிறுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிஹின் எயார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட வங்கிக்கடன் குறிப்பிடப்பட்ட தொகையைவிட, அதிக அளவில் கூடியதாலேயே இந்த எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டிருக்கின்றது. மிஹின் எயார் நிறுவனத்துக்கு 2 கோடி ரூபா வரையிலான கடனையே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது என்று கூறப்படுகின்றது.

எனினும் அந்த நிறுவனத்தின் தற்போதைய கடன் 5 கோடி ரூபாவை தாண்டி விட்டது என்றும் அதனாலேயே இந்த நிலை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

### கண்டியில் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 9

கண்டி மெதவெல்லப் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றினுள் அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று புகுந்து தாக்குதல் நடத்தியதில் ஐவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முற்பகல் குறிப்பிட்ட வர்த்தக நிலையத்துக்கு சுமார் 15 பேர் கூரிய ஆயுதங்களுடன் வந்து தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.





மாபெரும் பௌதிகவியல் கருத்தரங்கு

**NEW SCIENCE CENTER**

யாழ்.நகர்.

- ★ எதிர்பார்ப்பு விடயங்களும் அவற்றின் விளக்கமும்.
- ★ முற்றிலும் நவீன முறை பாடச் சுருக்கம்
- ★ அச்சிடப்பட்ட பாட குறிப்புகள்
- ★ மாதிரி வினாக்களும், விடைகளும்
- ★ நவீன கற்பித்தல் முறை மூலம் பாட விளக்கம் (Multi media Projector மூலம் பாடரீதியான Animations)

ஆரம்பம்: 12.07.2007 (வியாழன்) 9 a.m.

**By: K.Selvan**

Proprietor: N.Poobalasingam.

மாபெரும் கருத்தரங்கு

இந்து நாகரிகம்

திரு S. பத்மராஜா

எதிர்பார்க்கை வினாக்களுடன்.....
12ஆம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

விக்னா கல்வி நிறுவனம்

தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

தமிழ் ஆசிரியர் திரு. குழந்தை அவர்களின் கருத்தரங்கு (சி-52843) மிக விரைவில்....

மானிப்பாயில் முதன் முதலில்

பிரிவு - 2 ஆரம்பம்!!

ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டும்.

(தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களும் ஆரம்பம்!!)

வகுப்புக்கள்யாவும் 11.07.07 அன்று 12.30கு ஆரம்பம்.

**Diploma in Mobile Phone Repairing**

(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)

மேலதிக விபரங்களுக்கு :-

**UNI TECHNOLOGY**

**ICT Education Trainers**

**Manipay. T.P:- 0777-110862**

(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)


## மரண அறிவித்தல்

### தம்பு இராமலிங்கம் (செல்லையா)

**(ஓய்வுபெற்ற அதிபர்)**

மீசாலை வாகையடியைப் பிறப்பிடமாகவும் பெரியமாவடி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இராமலிங்கம் நேற்று (08.07.2007) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பு - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற டாக்டர் சரவணமுத்து, நடராஜா (இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்), சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலாதேவன் (இளைப்பாறிய பிரதேச சபை பிரதம லிகிதர்), இந்திராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுப்பிரமணியம் (அதிபர், வரணி மகா வித்தியாலயம்), அனுஷா (ஆசிரியை வீரசிங்கம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற கீதா, மணிவண்ணன், தீபனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மைத்திரேயி, மித்திராஜினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2006) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் பெரியமாவடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்லாரை கொற்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னுச்சாமி வீதி,
பெரியமாவடி,
சாவகச்சேரி.

தகவல்:
**இ.கலாதேவன் (மகன்)**
தொ.பே. 0776155930

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org